REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 டிசம்பர் 7 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022
வரு. 90 இல. 289 | Wednesday 07, December, 2022 | 12 பக்கங்கள் | 50/-

**வரவு செலவு திட்டம் 2023**

## மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நாளை



நிதி அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த வரவு செலவு திட்டத்தின் மூன்றாவது வாசிப்புக்கான வாக்கெடுப்பு, நாளை (08) இடம்பெறவுள்ளது.

அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதம் (மூன்றாவது வாசிப்பு) நாளை மாலை நிறைவுற்றதும், மாலை 5.00 மணிக்கு 04

## மலையக மக்கள் பிரச்சினைகள் யாவும் தீர்க்கப்பட்டால் ஜனாதிபதிக்கு ஆதரவு

### சபையில் வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மலையக மக்களின் வீடு, காணி, சம்பளம் உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சினைகளை தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால், தமிழ் முற்போக்கு கூட்டணி ஜனாதிபதிக்கு முழுமையான ஆதரவை வழங்கத் தயாரென வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாம் எதிரானவர்களல்ல. அவரது சிறந்த வேலைத் திட்டங்களுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கத் தயார். எனினும் 04

## கோடிக்கணக்கான பெறுமதியான வலம்புரி சங்குடன் ஒருவர் கைது



வலம்புரி சங்கு வைத்திருந்த சந்தேக நபரை, கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து

இந்நபர் கைது செய்யப்பட்டார். திங்கட்கிழமை (05) இரவு மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி 3ஆம் பிரிவில் இவர் கைதானார். இந்நபர், ஆரையம்பதியைச்சேர்ந்த 42 வயது மதிக்கத்தக்கவராவார்.

கைது செய்யப்பட்ட நபர் உள்ளிட்ட சான்று பொருட்கள் நீதிமன்ற நடவடிக்கைக்காக காத்தான்குடி 04

## சர்வதேச பல்கலைக்கழகங்களை நிறுவுவது தொடர்பில் விசேட குழு

### கல்வி அமைச்சருக்கு ஜனாதிபதி ரணில் ஆலோசனை



பாராளுமன்றத்திலுள்ள முன்னாள் கல்வி அமைச்சர்கள், உயர் கல்வி அமைச்சர்கள் மற்றும் கட்சித் தலைவர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்து, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களை இலங்கையில் நிறுவுவது தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கல்வி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்கிழமை (06) நடைபெற்றது. இதன்போதே, 04

**இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பிலான**

# இராஜதந்திர மட்ட பேச்சுக்கள் இன்னும் கைவிடப்படவில்லை

### பாராளுமன்றத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



**மீனவர்களின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கான முழு அதிகாரத்தையும் ஜனாதிபதி எனக்கு வழங்கியுள்ளார்**

கடற்றொழில் அமைச்சரென்ற வகையில் மீனவர்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான முழு அதிகாரத்தையும், ஜனாதிபதி தமக்கு வழங்கியுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக இருதரப்பு இராஜதந்திர பேச்சுவார்த்தைகளை நாம் கைவிடவில்லையென்றும் சபையில் தெரிவித்த அமைச்சர், அந்த நடவடிக்கைகள் தொடர்வதாகவும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போது ஜேவிபி எம்பி விஜித ஹேரத் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த காலத்தில், அத்துமீறி நாட்டுக்குள் பிரவேசிக்கும் இந்திய மீன்பிடி படகுகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்படுமென்று மன்னாரில் வைத்து தெரிவித்தார். அது, இப்போது 04

**பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு**

## இலங்கைக்கு பல்தரப்பு நிதி நிறுவன ஒருங்கிணைந்த உதவிகள் அவசியம்

### WB, ADB, IMF, AIIB நிதி நிறுவனங்களின் தலைவர்கள் தீர்மானம்

பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீள்வதற்கு, பல்தரப்பு நிதி நிறுவனங்களின் ஒருங்கிணைந்த உதவித் திட்டம் இலங்கைக்கு அவசியமென சர்வதேச நிதி நிறுவனங்களின் தலைவர்கள் தீர்மானம் மேற்கொண்டுள்ளனர். உலக வங்கி (WB), ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB), சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) ஆகியவற்றின் பிரதிநிதிகளே இத்தீர்மானத்துக்கு வந்துள்ளனர்.

கொழும்பில், ஜனாதிபதி 04

## இரட்டைக் குடியுரிமையுடைய எம்.பி. பாராளுமன்றத்தில் இருக்கின்றாரா?

### நிச்சயம் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பேன்



இரட்டைக் குடியுரிமை கொண்ட எம்.பி.யொருவர் பாராளுமன்றத்தில் இருப்பதாக வெளியாகியுள்ள தகவல் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (06) எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் முன்வைத்த கருத்தொன்றுக்கு பதிலளிக்கையிலேயே சபாநாயகர் இதனை தெரிவித்தார்.

முஜிபுர் ரஹ்மான் எம்.பி, குறிப்பிடுகையில், குடிவரவு, குடியகல்வுதிணைக்களத்தின் கட்டுப்பாட்டாளரால் வெளியிடப்பட்டுள்ள 04

## அரசாங்க ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயது 60

### அதிவிசேட வர்த்தமானி வெளியீடு



அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு பெறும் வயதெல்லையை அறுபதாக வரையறுத்து அரசாங்கம்

அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலையும் வெளியிட்டுள்ளது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரான பிரதமர் தினேஸ் குணவர்த்தனவால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இத்தீர்மானம் எதிர்வரும் 2023 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளதாக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. 04

**இணையத்தளத்தில் முதல் முறையாக**

## சிங்களம், தமிழில் Domain Name Dot இலங்கை, Dot லங்கா

### லேக்ஹவுஸ் முதலாவதாக இணைவு

இந்நாட்டின் இணையதள வரலாற்றிலேயே விசேட மைல்கல்லாக அடையாளப்படுத்தி வர்த்தக நாமத்தை (Domain Name) சிங்கள மற்றும் தமிழ் மொழியில் (Dot Lanka (இல) and Dot illangai (இலங்கை). நேற்று முதல் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்நாட்டின் மிகப்பெரிய ஊடக நிறுவனமான லேக் ஹவுஸ் நிறுவனம் இந்நாட்டின் ஊடக நிறுவனங்களிடையே விசேட இடத்தை பெற்று நேற்று முதல் இந்த தொழில்நுட்பத்துடன் இணைந்து கொண்டது. அதன்படி லேக்ஹவுஸ் நிறுவனம் தனது வெளியீடுகளுக்கு உரிய Domain பெயரை சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் முன் வைக்கும். 04



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று கொழும்பில் ஜப்பானிய தூதுவர், அமெரிக்க தூதுவர், பிரித்தானிய உயர்ஸ்தானிகர், இந்திய உயர்ஸ்தானிகர் மற்றும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடினார். இருதரப்பு அபிவிருத்தி, ஒத்துழைப்பு தொடர்பாக இச்சந்திப்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

ஐஸ் மற்றும் போதை மாத்திரைகள்
**பாடசாலை மாணவர்களூடாக மாணவர்களுக்கு விற்பனை** 03

**கொலம்பியாவில் பயங்கரம் மண்சரிவுக்குள் சிக்கிய பஸ்**
32 பயணிகள் புதையுண்டு பலி 03

## மின் கட்டணத்தை உயர்த்தாவிடின் 6 மணி நேரமாக மின்வெட்டு நீளும்

### பாராளுமன்றில், அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மின் கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பதை தவிர மாற்றுத் திட்டம் எதுவும் கிடையாதென மின் சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தற்போதைய இக்கட்டான நிலையில் நடைமுறைக்குப் பொருத்தமான வகையில் மின்கட்டணத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படாவிட்டால் அடுத்த வருடத்தில் 06 முதல் 08 மணி நேரம் வரை தினந்தோறும் மின்துண்டிப்பை அமுல்படுத்த நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

மின்சார சபை தனியார் மின்னுற்பத்தி நிலையங்களுக்கு 70 பில்லியன் ரூபாவையும் மின் விநியோகத்தர்களுக்கு 04

## 4,000 கிலோ பீடி இலைகளுடன் 08 இந்தியர் ஆழ்கடலில் கைது

### இரண்டு நாட்டுப் படகுகளும் கடற்படையினர் வசம்



சட்ட விரோதமாக நாட்டுக்குள் கொண்டு வந்த 4,000 கிலோ பீடி இலைகளுடன் இரண்டு மீன்பிடி படகுகளை வட மேற்கு கடலில் கடற்படையினர் கைப்பற்றினர்.

இலங்கைக்கு வடமேற்கு புறமாகவுள்ள இலங்கை கடல் எல்லையில் இலங்கை கடற்படை மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின் போது சட்ட விரோதமாக இந்நாட்டுக்குள் கொண்டுவந்துகொண்டிருந்த 4,000 கிலோ பீடி இலைகளை 04

## எமது கடலையும், நிலத்தையும் தாரை வார்க்க வேண்டாம்

### அங்கஜன் எம்,பி பாரளுமன்றில் தெரிவிப்பு



எங்கள் கடலையும் நிலங்களையும் யாரோ சிலரின் இலாபத்துக்காக தாரைவார்ப்பது மக்களுக்கு செய்யும் துரோகமென பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவசாயம், கடற்றொழில், நீர்ப்பாசனம் தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் நேற்று விவசாயம், மீன்பிடி, நீர்ப்பாசனம் தொடர்பாக, விவாதித்துக் கொண்டிருக்கிறோம். 04

## டீசல் விலை குறைந்தாலும் பஸ் கட்டணம் குறையாது

### கெமுனு விஜேரட்ண திட்டவட்டமாக அறிவிப்பு



டீசல் விலை குறைக்கப்பட்டாலும் பஸ் கட்டணம் குறைக்கப்பட மாட்டாதென, இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பெற்றோலியக் கூட்டுதாபனத்தின் ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டது. இதன்படி, ஒரு லீற்றர் ஒட்டோ டீசலின் புதிய விலை 420 ரூபாவாக மாறியுள்ளது. 04

## மலையக தமிழர்கள் இலங்கைக்கு வந்து குடியேறி 200 ஆண்டுகள்!

### பாரதப் பிரதமர் மோடி தலைமையில் கௌரவிப்பு விழா



இந்திய வம்சாவளி தமிழர்களான மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200ஆவது ஆண்டை முன்னிட்டு, விசேட விழாவொன்றை நடத்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மானித்துள்ளது. இவ்விழாவில், பிரதம அதிதியாக இந்திய பிரதமர் நரேந்திர மோடியை பங்குபற்றவைப்பதற்கு அழைப்பிதழை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். 04

## கொழும்பில் சிறுநீரக மோசடியில் ஈடுபட்ட குழுவின் முக்கிய நபர் கைது

### கிராண்ட்பாஸில் சுற்றிவளைத்த CIDயினர் அதிரடி



பொரளையிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் இடம்பெற்றதாக கூறப்படும் சிறுநீரக மோசடியின் பிரதான முகவராக செயற்பட்ட நபர் ஒருவரை, கொழும்பு குற்றவியல் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கிராண்ட்பாஸ் கஜிமா வத்தை பகுதியைச் சேர்ந்த 41 வயதான சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மோசடியில் ஈடுபட்ட மேலும் பலரை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கொழும்பு குற்றவியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொரளை 04

90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்




# தம்பேத்தன தோட்டத் தொழிலாளர் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு தீர்வு

## செந்தில் தொண்டமான் நடவடிக்கை





தம்பேத்தன தோட்ட தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் குறித்த தோட்ட நிர்வாகத்துடன் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடலில் ஈடுபட்டு தீர்வை பெற்றுக் கொடுத்துள்ளார்.

தம்பேத்தன தேயிலை தொழிற்சாலையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில்,

1.தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்ட அரை சம்பளம் முழு சம்பளமாக வழங்க நிர்வாகம் ஒப்புதல் வழங்கியது.

2.வலுக்கட்டாயமாக 20 கிலோ கொழுந்து பறிக்க வேண்டும் என்ற நிபந்தனை நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்பட்டது 20 கிலோ வலுக்கட்டாயமாக நிர்ணயிக்க முடியாது எனவும், தேயிலை மலைகளுக்கு ஏற்ற வகையிலே நிர்ணயிக்கப்பட வேண்டும் எனவும், 20 கிலோவாக இருந்த அடிப்படை தொகை 16 கிலோவாக குறைக்கப்பட்டது.

3.ஒவ்வொரு நிலுவைக்கும் வலுக்கட்டாயமாக 3 கிலோ தேயிலை குறைப்பு 1 கிலோவாக மாற்றி அமைக்கப்பட்டது.

4.ஞாயிறு மற்றும் போயா நாட்கள் ஒன்றறை சம்பளம் வழங்கப்படவில்லை வழங்குவதாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

5.நிபந்தனை, ஓய்வூதியத் தொழிலாளர்களுக்கு கைகாசு அடிப்படையில் ஊதியம் வழங்கப்பட்டு வந்தது இனிவரும் காலங்களில் முழு சம்பளமாக வழங்கப்படும் என ஒப்புதல் வழங்கப்பட்டமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

தோட்ட நிர்வாகத்தால் வழங்கப்பட்ட ஒப்புதலை ஏற்று, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத்தில் இருந்து தேயிலை தூளை ஏற்றுமதிக்கு வெளியேற்ற அனுமதி வழங்கியுள்ளது.



புஸ்ஸல்லாவ பகுதியைச் சேர்ந்த சமூக சேவகர் வெள்ளசாமி பிரசனா கலாநிதி பட்டம் பெற்றுள்ளார். கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அகில இலங்கை சமூக,கலாசார சுற்றுப்புறச்சூழல் அதிகார சபை ஊடாக இப்பட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

# ரங்கல கெட்டகஹவெல தோட்டத்தில் 18 இலட்சம் ரூபா பணம் திருட்டு; ஒருவர் கைது

**எம்.ஏ.அமீனுல்லா**

தெல்தெனிய பொலிஸ் பிரிவிலுள்ள ரங்கல கெட்டகஹவெல பகுதியில் உள்ள தனியார் தோட்ட நிறுவனமொன்றுக்கு சொந்தமான தேயிலை தொழிற்சாலையில் ஊழியர்களின் சம்பளம் வழங்குவதற்காக கொண்டு வரப்பட்ட 18 இலட்சம் ரூபா பணத்தை திருடிய சந்தேகத்தின் பேரில் ஊழியர் ஒருவர் நேற்று (06) பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். தேயிலை தொழிற்சாலைக்கு சொந்தமான அலுவலகத்தில் உள்ள லாச்சியிலிருந்து பணம் திருடப்பட்டுள்ளதுடன், பொலிஸ் நாய்களை பயன்படுத்தி அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையை ரங்கல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# கம்பளை ஐயமாலபுர ஸ்ரீ முத்துமாரியம்பாள் மகா கும்பாபிஷேகம்

**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

கம்பளை நகரத்தின் அருகாமையில் அமைந்துள்ள ஜயமாலபுர ஸ்ரீ முத்துமாரியம்பாள் திருக்கோவில் அஷ்ட பந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விழா எதிர்வரும் (9) ஆம் திகதி முதல் (11) ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

(09) காலை 7.58 மணிக்கு பால கணபதி வழிபாடு, பூர்வாங்க கிரியைகள், சாந்தி பூஜைகள் நடைபெற்று பகல் 12.00 மணிக்கு மகாவலி கங்கையில் இருந்து நீர் எடுத்து வருதலை தொடர்ந்து மாலை 4.00 மணிமுதல் தருண கணபதி வழிபாடு நடைபெறவுள்ளது. 10.12.22 காலை 8.00 மணிக்கு தைலாப்பியங்கம் யாகபூஜை விசேட திரவ்ய ஹோமம் காலை 8.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.

11.12.22 காலை 6.00 மணிக்கு மூகூர்த்த கணபதி ஆராதனை, யாகபூஜை, மகா பூர்ணாகுதி, தீபாராதனை, கும்ப உத்தாபணம் காலை 7.30 மணிக்கு ஸ்தூல லிங்க ஸ்தூபி கும்பாபிஷேகம் புஷ்பாஞ்சலி கும்ப மூலாயப்பிரவேசம் கும்ப விம்ப சமயோஜனம் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று அம்பாள் சர்வாலங்கார ஸ்வருபியாக தசதர்சனம், மாங்கல்யதராணம் விசேட பூஜை மகேஸ்வர பூஜை நடைபெற்று அன்னதானம் வழங்கப்படவுள்ளது. கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ ராம சோமாஸ்கந்த சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறவுள்ளது.

# சிவனொளிபாதமலை யாத்திரை; புனித தந்த தாது பெரஹெரா

**காவத்தை தினகரன் விசேட, இரத்தினபுரி சுழற்சி நிருபர்கள்**

சிவனொளிபாதமலை புனித யாத்திரையை முன்னிட்டு நேற்று (06) காலை பெல்மதுளை கல்பொத்தாவெல சிவனொளிபாதமலை விகாரையில் இருந்து புனித தந்த தாது பெரஹெரா மூலம் சிவனொளிபாதமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பலாங்கொடை பொகவந்தலாவ வீதி, அவிசாவளை ஹற்றன் வீதி, இரத்தினபுரி பலாபந்த வீதி, குருவிட்ட ஏரத்ன ஆகிய நான்கு வீதிகளின் ஊடாக பெரஹெரா சிவனொளிபாதமலையை நோக்கி சென்றது.



பூஜை மற்றும் பெரஹெரா வழிபாடு நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, ஆதிவாசிகளின் தலைவர் வன்னியலாயத்தோ, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தகம ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கிரிபோருவ முத்துமாரியம்மன் வருடாந்த தேர்த்திருவிழா

எட்டியாந்தோட்டை கிரிபோருவ எனும் கிராமத்தின் மத்தியில் கங்கைக் கரையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மனுக்கு சுபகிருது வருட அலங்கார மகா உற்சவம் நாளை மறுதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அன்று இரவு கரகம் பாலிப்பு இடம்பெறவுள்ளது. 9ஆம் திகதி காலை பறவைக்காவடி ஊர்வலமும் மாலை திருச்சூரக திருவேட்டைத் திருவிழாவும் 10 ம் திகதி காலை 08.00 மணியளவில் இல.03 பிள்ளையார் கோவிலில் இருந்து பால் குட பவனியும் காலை 10.00 மணயளவில் பாலாபிஷேகம் மற்றும் சகஸ்ரநாம அர்ச்சனைகளுடன் அம்பாளுக்கு 1008 சங்குகளால் அபிஷேகமும் மாலை 07.00 மணியளவில் இரதோற்சவத்திற்கான விஷேட வசந்த மண்டப பூஜையுடன் கிரிபோருவ அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் மற்றும் விநாயக பெருமான் இரதங்களில் ஆரோகணித்து வீதி உலா வருவர். 11 ம் திகதி காலை தீர்த்த உற்சவமும் தொடர்ந்து கொடியிறக்கம் மற்றும் கரகம் குடிவிடுதல் இடம்பெறும்.

மாலை திருவூஞ்சல், பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். 12ம் திகதி மாலை வைரவர் உற்சவத்துடன் இவ்வருடத்திற்கான அலங்கார மகா உற்சவம் இனிதே நிறைவுபெறும்.

# பழங்கால புத்தர் சிலையை விற்க முயன்ற மூவர் கைது

**ஊவா சுழற்சி நிருபர்**

ஹாலிஎல பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கந்தகெடிய பகுதியில் பழைமையான புத்தர் சிலை ஒன்று விற்பனைக்காக வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக கந்தகெடிய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து 03 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாறுவேடம்தரித்த பொலிஸ்அதிகாரிகள் சிலையை கொள்வனவு செய்வது போல் பாசாங்கு காட்டி வீட்டிற்குள் நுழைந்து சிலையை கைப்பற்றியதோடு,46,41,26 வயதுடைய மூவரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த புத்தர் சிலை மிகவும் பழைமை வாய்ந்தது எனவும் சந்தேக நபர்கள் 80 இலட்சம் ரூபாவுக்கு இப் புத்தர் சிலையை விற்பனை செய்வதற்காக பேரம் பேசியதாகவும் தெரிவித்த கந்தகெடிய பொலிஸார் சந்தேக நபர்கள் மூவரையும் பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மேலும் தெரிவித்தனர்.

# பேராதனை தாவரவியல் பூங்காவை பார்வையிட வந்த பிரிட்டன் பிரஜை மரணம்

**எம்.ஏ.அமீனுல்லா**

பேராதனை தாவரவியல் பூங்காவை பார்வையிட வருகை தந்திருந்த 69 வயதுடைய பிரிட்டன் நாட்டு பிரஜை ஒருவர் நேற்று முன்தினம் (05) உயிரிழந்துள்ளதாக பேராதனை பொலிஸார் தெரிவிக்கின்றனர். பிரிட்டன் நாட்டு பிரஜையும் பெண்ணொருவரும் காலை கண்டிக்கு சென்றிருந்த அன்றைய தினமே இவர்கள் தாவரவியல் பூங்காவைப் பார்வையிடச் சென்றுள்ளனர்.

மேலும் அன்று காலை 10.30 மணியளவில் திடீரென அவருக்கு ஏற்பட்ட சுகவீனம் காரணமாக தாவரவியல் பூங்காவிற்கு சொந்தமான வாகனத்தில் பேராதனை போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்

இவ்வாறு, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலே பிரித்தானிய பிரஜை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் குறித்த சம்பவம் தொடர்பில் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திற்கு அறிவிக்க பேராதனை போதனா வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி தி அமல் ஜயவர்தன நடவடிக்கை எடுத்துள்ளார்.

உயிரிழந்த பிரிட்டன் பிரஜை பெனடிக் லிலே என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் கடந்த 22ஆம் திகதி சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்துள்ளார்.

# சீனாவின் அழுத்தங்களுக்கு இத்தாலி அடிபணியாது!

## இத்தாலிய செனட்டர் ஆவேசம்



அட்லாண்டிக் பிராந்திய நாடுகள் தொடர்பிலான ஜெர்மனி மற்றும் பிரான்சின் கொள்கைகளை விட இத்தாலியின் விசேட கொள்கை வித்தியாசமானது என்றும் சீனாவின் பாரிய பொருளாதார அழுத்தங்களுக்கு மத்தியிலும் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதில் புதிய இத்தாலிய அரசு உறுதியுடன் செயற்படும் என்றும் இத்தாலிய செனட்டர் கியூலியோ தார்ஸி ரோம் மாநாடொன்றில் தெரிவித்துளளார்.

இத்தாலி செனட் சபையின் ஐரோப்பிய விவகாரங்களுக்கான நிரந்தர ஆணைக்குழுவின் தலைவரான இவர், ரோமில் நடைபெற்ற 'ஜனநாயகம் தொடர்பான உரையாடல்: இந்தோ பசுபிக்கின் எதிர்காலம்' என்ற தலைப்பிலான கலந்துரையாடலை முடித்து வைத்தபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தோ – பசுபிக்கில் ஜனநாயக நாடுகள் குழுவும் சீனாவின் தலைமையிலான எதேச்சதிகார நாடுகளின் குழுவுமாக இரண்டு குழுக்கள் காணப்படுவதாக குறிப்பிட்ட அவர், ஜனநாயகத்துக்கும் எதேச்சதிகாரத்துக்கும் இடையிலான நீண்டகால மோதலில் நாம் இன்றுள்ளோம் என்றார்.

முன்னாள் இத்தாலிய பிரதமர் கொண்டேவினால் சீனாவின் கடல் பட்டுப்பாதை திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை புதிய இத்தாலிய பெண் பிரதமர் ஜோர்ஜியா மெலனி நீடிக்கப்போவதில்லை என்றும் அவர் சீனாவின் மீது கடுமையாகவே நடந்து கொள்வார் என்றும் இவர் மேலும் தெரிவித்தார்.

இவர் 'வெரிட்டா' இதழுக்கு சமீபத்தில் அளித்திருந்த ஒரு செவ்வியில், ஆபிரிக்காவில் சீனா கண்மூடித்தனமான கனிம கொள்ளையில் ஈடுபட்டிருப்பதாகவும் அங்கே பணிபுரிபவர்கள் மிக மோசமாக நடத்தப்படுவதாகவும் இவற்றின் எதிர் விளைவாகவே இப்பிராந்தியத்தில இருந்து அகதிகளாக ஐரோப்பா நோக்கி வருவோர் தொகை கடந்த பத்து ஆண்டுகளில் அதிகரிக்கத் தொடங்கியமைக்கான காரணம் எனவும் தெரிவித்திருந்தார்.

வட கடலில் இருந்து பசுபிக் வரையிலான பெரும் பிராந்தியம் சுதந்திரமாக விடப்பட வேண்டும் என்றே இந்தோ – பசுபிக் நாடுகள் விரும்புகின்றன. ரஷ்யாவும் சீனாவும் மட்டுமே இதற்கு எதிரானவை என இவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

# பயங்கரவாதம், போதை கடத்தல் நாடாக ஆப்கான் விளங்கக் கூடாது!

## மொஸ்கோ உதவும் நாடுகள் மாநாட்டில் தெரிவிப்பு

ஆப்கானிய பூமி இனி எப்பொழுதுமே சர்வதேச பயங்கரவாதிகளின் புகலிடமாகவும், இயங்கு தளமாகவும், போதைப் பொருள் கடத்தல்காரர்களின் இருப்பிடமாகவும் இருக்கக் கூடாது என்றும் அமைதியான, ஒன்றுபட்ட, இறைமையும் சுதந்திரம் கொண்ட பொருளாதார வளமுடைய நாடாகத் திகழ்வதை உறுதிப்படுத்துவோம் என்றும் மொஸ்கோ மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கலந்து கொண்ட நாடுகள் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தான் அபிவிருத்தி தொடர்பான பிராந்திய நாடுகளின் கூட்டமொன்றை ரஷ்யா மொஸ்கோவில் நவம்பர் 16இல் நடத்தியது. இம்மாநாட்டில் சீனா, இந்தியா, ரஷ்யா, பாகிஸ்தான் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். ஈரான், கஸகஸ்தான், கர்ஜிஸ்தான், தஜிகிஸ்தான், துர்க்மேனிஸ்தான் மற்றும் உஸ்பெஸ்கிஸ்தான் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கட்டார், அமீரகம், சவூதி அரேபியா, துருக்கி விருந்தினர்களாகவும் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தன.



ஆப்கானிய மக்களின் உடனடிப் பிரச்சினைகளை உணவு மற்றும் மருந்துகளுக்கு நிலவும் தட்டுப்பாடு நீக்கப்படுவது முதல் வேலையாக இருக்க வேண்டும் என்றும் நாட்டின் அரசியல் பிரச்சினைகள் சமாதான பூர்வமாக தீர்க்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்த இந்தியா, காபூலில் உள்ள இந்திய தூதரகத்தில் இதன் பொருட்டு ஒரு தனிக்குழு நியமிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தது.

இந்நாடு போதைப் பொருள் கடத்தல், பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இவை தொடர்பாக அந்நாட்டு அரசு தன் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். வெளிப் பார்வைக்கு தெரியும் வகையில் அந்நாடு பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக சண்டை செய்து அவற்றைத் தகர்த்து தொலைத்துக்கட்ட வேண்டும். பயங்கரவாதத்துக்க இடமளிக்கும் நாடாக அது இருக்கக் கூடாது என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 டிசம்பர் 7 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN




## பாராளுமன்ற அமர்வு 10ஆம் திகதிக்கு பதிலாக 13இல் கூடும்

பாராளுமன்றத்தை எதிர்வரும் (10) சனிக்கிழமைக்குப் பதிலாக, எதிர்வரும் (13) செவ்வாய்க்கிழமை கூட்டுவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் (05) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக எதிர்வரும் (10) திகதியை முழு நாளும் ஒதுக்குவதற்கு இதற்கு முன்னர் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, எதிர்வரும் (13) செவ்வாய்க்கிழமை முழு நாளும் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டிருப் பதுடன், முன்னர் தீர்மானிக்கப்பட்டபடி (09) பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் உள்நாட்டர சிறை (திருத்தச்) சட்ட

04

## புதிய வருடத்தில் முதலாவது பாராளுமன்ற அமர்வு ஜனவரி 17ஆம் திகதி

பாராளுமன்றத்தை எதிர்வரும் (13) க்குப் பின்னர் 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் (17) இல்,கூட்டுவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் (05) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்தார்.

### 2050 ஆம் ஆண்டை எதிர்கொள்ளும் வகையில்

# வலுவான புதிய பொருளாதார முறைமை அறிமுகம் செய்யப்படும்

### இலங்கை பொருளாதார மாநாட்டில் ஜனாதிபதி




2050 ஆம் ஆண்டை எதிர்கொள்ளும் வகையில் வலுவான புதிய பொருளாதார முறைமையை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இது, நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் பொருளாதார மறுசீரமைப்புக்கு மேலதிகமான பணி என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பழமையான பொருளாதார முறைமையை கையாள்வதன் மூலம், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாதெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முதலாவதாகவும் இரண்டாவதாகவும் மூன்றாவதாகவும் தேவைப்படுவது வெளிநாட்டு அந்நியச்செலாவணியே என்றும் ஆணித்தரமாக தெரிவித்தார்.

இலங்கையின் முதன்மையானதும் மிகவும் எதிர்பார்ப்புடையதுமான வருடாந்த பொருளாதார நிகழ்வான, 2022ஆம் ஆண்டுக்கான இலங்கை பொருளாதார மாநாடு நேற்று (05) கொழும்பு ஷங்ரில்லா ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வை அங்குரார்ப்பணம் செய்து வைத்த பின் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு பேசிய அவர்,

இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமாயின், கடன் மீளச்

04

# மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை தீர்க்க அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்



வடக்கு, கிழக்கு உட்பட புத்தளம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வாழும் மீனவர்கள், விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்த்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இதன்மூலமே, சரிந்து போன நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வழிவகை செய்ய முடியும் எனவும் மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று (06) உரையாற்றும் போதே, அவர் இந்த விடயத்தை தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர்,

"மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, புல்மோட்டை, வாழைச்சேனை, கல்முனை, நிந்தவூர், சாய்ந்தமருது, ஒலுவில், பொத்துவில், புத்தளம் மற்றும் கல்பிட்டி ஆகிய பகுதிகளில் அதிகமாக வாழும் மீனவர்கள் பலர், தொலைபேசியில் தொடர்புகொண்டு, மீனவத் தொழிலில் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தெரிவித்தார்கள். அவர்கள் தற்போது 430 ரூபாவுக்கு மண்ணெண்ணெய் வாங்கி மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்றனர் .ஆனால், ஒரு கிலோ மீனை 400 ரூபாவுக்கு விற்பனை செய்யும் போது, இந்தத் தொழிலில் ஏற்படும் நட்டத்தை அவர்கள் சுட்டிக்காட்டினர். இதுதொடர்பில், கடற்றொழில் அமைச்சர் அரசாங்கத்துடன் பேசி, மீனவர்களுக்கு சகாய விலையில் மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை எடுப்பது அவசியம்.அப்போதுதான். அவர்களது எதிர்காலம் பாதுகாக்கப்படும். தற்போது மீனவக் குடும்பங்கள் பல இந்தத் தொழிலை நிறுத்தி வருகின்றன. சிலர் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாமல் அவதியுறுகின்றனர்.

அதேபோன்று, இராஜாங்க அமைச்சர் பேசும்போது, பல்வேறு வீடமைப்புத் திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதாகக் கூறினார். ஆனால், எமது பகுதிகளில், அவ்வாறான விடயங்கள் அவ்வளவாக நடைபெறுவதில்லை என்பதை கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடற்றொழில் அமைச்சர் எமது மாகாணத்தை சேர்ந்தவர் என்ற வகையில், வடக்கு, கிழக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, அவர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மன்னார், வங்காலை பிரதேசத்தில் கடலரிப்பு ஏற்பட்டு, கடல் நீர் ஊருக்குள் புகுந்து முக்கியமான கிராமம் அழிந்துபோகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. கடலணைகள் அமைப்பதன் மூலமே இதனை

04

# கொலம்பியாவில் பயங்கரம்; மண்சரிவுக்குள் சிக்கிய பஸ்

### 32 பயணிகள் புதையுண்டு பலி



வடமேற்கு கொலம்பியாவில் பயணிகள் பஸ் வண்டி, மண்சரிவுக்குள் சிக்கி புதையுண்டதில் சுமார் 34 பேர் உயிரிழந்துள்ளதாக கொலம்பிய அரசாங்க அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.

பலத்த மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவினால், பியூப்லோ ரிக்கோ மற்றும் சாண்டா சிசிலியா ஆகிய நகரங்களுக்கிடையிலான வீதியில் இந்த பயணிகள் பஸ் விபத்துக்குள்ளானது.


மீட்புப் பணியாளர்கள் மேற்கொண்ட முயற்சியால், மண்சரிவிலிருந்து ஒன்பது பேர்,

04

### ஐஸ் மற்றும் போதை மாத்திரைகள்

# பாடசாலை மாணவர்களூடாக மாணவர்களுக்கு விற்பனை

### நான்கு பேர் STF யினரால் கைது



மாணவர்களை இலக்கு வைத்து ஐஸ், போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் விற்பனை செய்த நான்கு பேர் ஹொரணை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம் 13 கிராம் ஐஸ் போதைப் பொருள்மற்றும்120மாத்திரைகள் இருந்ததாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இவர்கள் தொடர்பில்

04

# ரஷ்ய தூதுவருடன் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சந்திப்பு



இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் யூரி மேட்டரி, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பிரமித்த பண்டார தென்னகோனை சந்தித்தார்.

கொழும்பிலுள்ள அனர்த்த முகாமைத்துவ நிலைய வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் இந்த சந்திப்பு (05) நடைபெற்றது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுக்கு வருகை தந்த ரஷ்யத் தூதுவரை, இராஜாங்க அமைச்சர் வரவேற்று கலந்துரையாடினார்.

இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தல், மற்றும் இராணுவ இராஜதந்திரத்தை மேம்படுத்துவது குறித்தும் இக்கலந்துரையாடலில், கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, இன்றைய தினம் அமைச்சில் நடைபெற்ற இந்ந சந்திப்பை நினைவுகூரும் வகையில், ரஷ்ய தூதருக்கு

04

### இலங்கையின் நேரடி வெளிநாட்டு முதலீடு

# 2022 அரையாண்டில் 523 மில்.அமெ.டொலர்

### முதலீட்டு அபிவிருத்தி அமைச்சு தெரிவிப்பு

அந்நிய செலாவணியை நாட்டுக்குள் கொண்டு வரும் திட்டங்களுக்காக பாரிய பங்களிப்பை பெற்றுக் கொடுத்ததால், இவ்வருடம் முதலாவது அரையாண்டு காலப்பகுதியில் 18,800 கோடி ரூபா (523 மில்லியன் அமெரிக்க டொலர்) இலங்கைக்கு கிடைத்துள்ளதாக முதலீட்டு அபிவிருத்தி அமைச்சு தெரிவிக்கின்றது.

இது, இவ்வாண்டுக்கான இலக்கின் நூற்றுக்கு 52.3 வீதத்தை நிறைவேற்றியுள்ளது.

மொத்தமாக எடுத்துக் கொண்டால் 1978 ஆம் ஆண்டிலிருந்து ஒட்டுமொத்தமாக 2022 வரை 20.6 பில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய நேரடி முதலீடுகள் கிடைத்துள்ளதாக முதலீட்டு அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் (திட்ட) எம்.ஏ.ஏ நிரோஷனி தெரிவித்தார்.

அரச செய்தித் திணைக்களத்தில் நேற்று (06) நடைபெற்ற சூம் தொழில்நுட்பத்துடனான கலந்துரையாடலில் இணைந்து கொண்ட அவர் இதனை தெரிவித்தார். 2023 ஆம் வருடத்துக்கான அமைச்சுக்களின் நடவடிக்கைகள் அபிவிருத்தி திட்டம் தொடர்பான வரவு, செலவு செயற்குழு கூட்டத்துக்கு இணைந்ததாக இக் கலந்துரையாடல் நடைபெற்றது.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், இலங்கை முதலீட்டு சபையின் கீழ் காணப்படும்1,550 நிறுவனங்கள் மூலம் 5,00,000 க்கும் அதிகமான வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன. இலங்கை முதலீட்டு சபையின் கீழ் 15 ஏற்றுமதி உற்பத்தி வலயங்கள் செயற்படுகின்றன.

நாட்டின் நிலையான அபிவிருத்தி இலக்கு மற்றும் அதனுடன் இணைந்த நிலையான நேரடி வெளிநாட்டு முதலீட்டை கவர்வதற்காக 2020 தொடக்கம் 2026 வரையான முதலீட்டு சபையின் மூலோபாய கட்டமைப்பு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டு முதலீடாக மூன்று பில்லியன் அமெரிக்க

04

# நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானம் 2022 இல் செப்டெம்பர் வரை 11.5 பில்லியன் அமெரிக்க டொலர்

### 2023 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருவாய் 19 பில்லியன் அமெரிக்க டொலர் எதிர்பார்ப்பு

இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானம் கடந்த 2021 ஆம் ஆண்டுக்கு இணையாக, இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் செப்டம்பர் மாதம் வரை 11.5 பில்லியன் அமெரிக்க டொலர் வளர்ச்சியை காட்டியுள்ளதாக முதலீட்டு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி கடந்த வருடத்துக்கு இணையாக செப்டம்பர் மாதம் வரை ஏற்றுமதி நூற்றுக்கு 10.74 வீதம் வரை அதிகரித்துள்ளதாகவும் முதலீட்டு அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் (திட்ட) எம்.ஏ.ஏ. நிரோஷனி தெரிவித்தார்.

இவ்வருடம் செப்டம்பர் மாதம் வரையான நாட்டின் மொத்த வர்த்தக பண்ட ஏற்றுமதி வருமானம் 9.996 மில்லியன் அமெரிக்க டொலரென சுட்டிக்காட்டிய அவர், மொத்த சேவைகள் ஏற்றுமதி 1,455.75 மில்லியன் அமெரிக்க டொலர் எனவும் இதன்படி, மொத்த வர்த்தக பண்டம் மற்றும் சேவைகள் ஏற்றுமதி 11.451.94 மில்லியன் அமெரிக்க டொலரெனக் கூறப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (06) சூம் தொழில்நுட்பத்தினூடாக நடைபெற்ற கலந்துரையாடலில் இணைந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்தார். 2023 ஆம் ஆண்டு அரசின் நடவடிக்கைகள் அபிவிருத்தி திட்டம் தொடர்பான வரவு செலவுத் திட்ட செயற்குழுக் கூட்டத்தின் போதே இக்கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், இவ்வாண்டு ஜனவரி மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரையான காலப்பகுதியில், சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களுடனான நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியில் மொத்த வர்த்தக பண்ட ஏற்றுமதி நூற்றுக்கு ஏழு வீதமாகும். கடந்த வருடம் அக்கால பகுதிக்கு இணைந்ததாக அது 10.25 வீத வளர்ச்சியைக் காட்டியுள்ளது.

அதேவேளை மொத்த ஏற்றுமதி 700.53 மில்லியன் அமெரிக்க டொலரெனவும் அவர் சுட்டிக் காட்டினார். இதேவேளை, எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, வர்த்தக பண்டம் மற்றும் சேவை ஏற்றுமதியில்19 பில்லியன் டொலரை வருமானமாக எதிர்பார்க்கிறது.

இதில்14.8 பில்லியன் டொலரை வர்த்தக பண்ட ஏற்றுமதி மூலமாகவும் 4.2 பில்லியன் டொலரை சேவைகள் ஏற்றுமதி மூலமாகவும் எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

BOI SRI LANKA

மேலும், 13 ஏற்றுமதியாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்ட துடன், கடந்த 2021 ஆம் ஆண்டு அவர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானம் 06 மில்லியன் அமெரிக்க டொலரெனவும் அவர் கூறினார்.


திகதி 05.12.2022 திங்கட்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4960
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ.9,949,640.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 3 6 3 3 6 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.15,336,836.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3202
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,655,460.00
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 14 39 64 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 60,894,424.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1415
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,026,360.00
வெற்றி இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 8 8 1 7 1 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.11,653,627.20

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 990
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,613,080.00
வெற்றி இலக்கினம் C வெற்றி இலக்கங்கள் 18 49 55 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 135,467,617.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 269
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 9,135,160.00
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 11 16 46 51
விசேட இலக்கினம் மேஷம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.2,537,800.00

கோடி 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1308
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,213,340.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.284,770,470.00
P 16 22 52 61 68
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## சர்வதேச பல்கலைக்கழகங்களை...

அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்துகையில்,

நாட்டில் தற்போது பாரிய அந்நியச் செலாவணி பற்றாக்குறை நிலவுகிறது. இசந்தர்ப்பத்தில், இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், ரஷ்யா, பெலாரஸ், இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளுக்கு கல்விக்காக வருடாந்தம் சுமார் 30,000 மாணவர்கள் செல்கின்றனர். இவர்களது பெற்றோர் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உத்தியோகபூர்வமற்ற முறையிலேயே அவர்களுக்கான டொலரை அனுப்புகின்றனர். இவ்வாறு மாணவர்களின் கல்விக்காக வருடாந்தம் சுமார் 3 பில்லியன் டொலர் நாட்டிலிருந்து அனுப்பப்படுவதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

மருந்து, எரிபொருள் மற்றும் எரிவாயு உள்ளிட்டவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள டொலர்களின் ஒரு பகுதியை இதற்காகவும் ஒதுக்க வேண்டியுள்ளது. உலகின் ஏனைய நாடுகள் அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொள்ளும் ஒரு உத்தியாக கல்வியைப் பயன்படுத்துகின்றன. இந்தியா, மலேசியா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இலங்கையில் அந்நாட்டு பல்கலைகழகங்களுக்கு மாணவர்களை தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. இதன் போது ஆயிரக்கணக்கான மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். எனவே தான், சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உயர் பல்கலைக்கழகங்களை உள்நாட்டில் நிறுவுவது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இவ்வாறு சர்வதேச பல்கலைக்கழங்களை நிறுவுவதால், நாட்டிலிருந்து அனுப்பப்படும் டொலர் தொகை எஞ்சும் அதே வேளை, இலங்கை மாணவர்கள் மாத்திரமின்றி வெளிநாடுகளிலுள்ள மாணவர்களும் கல்விக்காக இங்கு வருகை தரக்கூடிய வாய்ப்புக்களும் ஏற்படும். இதனூடாக எமக்கு டொலர் வருமானம் கிடைக்கப்பெறும் என்றார்.

## மூன்றாம் வாசிப்பு மீதான...

வாக்கெடுப்பை நடத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

1979ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ், ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட 2022.12.03ஆம் திகதிய 2308/62 இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையைப் பாராளுமன்றத்தின் அனுமதிக்காக அன்றைய தினம் (08ஆம் திகதி) சமர்ப்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் (05) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில்,இதுபற்றி தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்தார்.

## அரசாங்க ஊழியர்களின்...

இதன்படி, 55 வயது பூர்த்தியாகின்ற போது அல்லது அதன்பின்னர் அரசாங்கத்தின் எந்தவொரு ஊழியரையும், ஓய்வுபெறுவதற்கு பணிக்க முடியும்.

தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரால் சேவையில் நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டாலன்றி, அரசியலமைப்பின் மூலம் அல்லது ஏதேனும் சட்டத்தின்மூலம் கட்டாயம் ஓய்வுபெறும் வயது குறிப்பிட்டுள்ள ஊழியர்கள் 60 வயது பூர்த்தியடையும்போது, கட்டாயம் சேவையிலிருந்து ஓய்வுபெற வேண்டுமென அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கோடிக்கணக்கான பெறுமதியான...

பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது. விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

## 4,000 கிலோ பீடி இலைகளுடன்...

கொண்டு வந்த இரண்டு இந்திய மீன்பிடி படகுகளை எட்டு இந்தியர்களுடன் கடற்படையினர் கைப்பற்றினர்.

கடற்பாதையில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் கடத்தல்களை கட்டுப்படுத்துவதற்காக இந்நாட்டு கடல் மற்றும் கடற்கரைகளை இணைத்ததாக கடற்படையினர் ரோந்து நடவடிக்கை மற்றும் தேடல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அதன்படி மேற்கு கடற்படை கட்டளை பிரிவினருடன் இணைந்த இலங்கை கடற்படை கப்பல் சுரணிமல மூலம் வடமேற்கு கடற்பரப்பில் 2022 டிசம்பர் மாதம் ஐந்தாம் தேதி இரவு மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது சர்வதேச கடல் எல்லையை மீறி கல்பிட்டி கதிரமலைமுனைக்கு அருகில் இந் நாட்டு கடல் எல்லைக்குள் நுழைந்த சந்தேகத்துக்கு இடமான இந்திய இரண்டு கடற்படை படகுகள் அவதானிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டதன. அவ்வேளையில் அந்த இரண்டு இந்திய மீன் பிடிப்படகுகளில் 128 பொதிகளில் பொதி செய்யப்பட்டு சட்டவிரோதமாக இந்நாட்டுக்குள் கொண்டு வந்த 4000 கிலோ பீடி இலைகளுடன் இரண்டு மீன்பிடி படகுகளையும் 08 இந்திய சந்தேக நபர்களையும் கடற்படையினர் கைப்பற்றினார்கள்.

இலங்கை கடற்படை 2022 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்மூலம் சட்டவிரோதமாக இந்நாட்டுக்குள் கொண்டு வர முயற்சி செய்து 15,000 கிலோ பீடி இலைகளை கைப்பற்றியுள்ளதோடு , இவ்வாறான கடத்தல் நடவடிக்கைகளை தடுப்பதற்காக கடற்படை எதிர்காலத்திலும் இந்நாட்டு கடல் வலயத்தில் அடிக்கடி அவதானிப்புகளை தொடர்ந்து மேற்கொள்ளும்.

## மலையக மக்கள் பிரச்சினைகள் யாவும்...

அவர் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கமத்தொழில் அமைச்சு, நீர்ப்பாசன அமைச்சு மற்றும் கடற்றொழில்அமைச்சுஆகியவற்றுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையி லே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

2021 மே 06 ஆம் திகதி இரசாயன உரத்திற்கு தடை செய்து வெளியிடப்பட்ட அமைச்சரவைப்பத்திரத்தால், நாட்டுக்கு இடி விழுந்ததென்றே கூற வேண்டும்.

காலில், முள் குத்தினால் அதனை எடுத்தெறிய வேண்டும். அதே போன்று தவறு நடக்கும் போது அதை திருத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இதே போன்றுதான், நீண்ட காலமாக நாட்டில் தொடரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கிறார். இது, வரவேற்கக் கூடிய விடயம். எனினும் மலையக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும்.

பல்வேறு அடிப்படை பிரச்சினைகளுடனேயே மலையக மக்கள் வாழ்கின்றனர். தற்போது அவர்களுக்கு விவசாயம் செய்வதற்கான வசதிகளும் இல்லாது போயுள்ளது.

நெல் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்கு வழங்கப்படும் உரம் மற்றும் கிருமி நாசினிகள் மலையக மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும். இதனால், பெரும்பாலான மக்கள் தற்போது விவசாய நடவடிக்கைகளை கைவிடும் நிலை உருவாகியுள்ளது. இந்த நிலையில் எவ்வாறு மரக்கறி பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும்?

மலையக மக்களுக்கு வீடுகள் இல்லை. வீடுகளை நிர்மாணிப்பதற்காக காணிகளும் இல்லை. தோட்ட மக்களின் காணிகளை தோட்ட கம்பெனிகள் அபகரிக்கும் நிலையே தற்போது அங்கு உருவாகியுள்ளது. இத்தகைய அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கைக்கு பல்தரப்பு நிதி நிறுவன...

ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று (06) நடந்த வட்டமேசை கலந்துரையாடலின் பின்னரே, இந்த தீர்மானத்துக்கு இவர்கள் வந்துள்ளனர்.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீண்டகால அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சியுடன் இணைந்ததான இலங்கையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை இவர்களிடம் முன்வைத்தார். உலக வங்கியின் துணைத் தலைவர் மார்ட்டின் ரைசர் (Martin Raiser), ஆசிய அபிவிருத்தி வங்கியின் துணைத் தலைவர் ஷிக்சின் சென் (Shixin Chen), சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஸ்ட அதிகாரி பீட்டர் ப்ரூயர் (Peter Breuer), ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் உர்ஜித் பட்டேல், பிரதமர் தினேஷ் குணவர்த்தன, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் ஆலோசகர் தினேஷ் வீரக்கொடி, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி. நந்தலால் வீரசிங்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி உள்ளிட்டோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## இரட்டைக் குடியுரிமையுடைய எம்.பி....

அறிக்கையை பாராளுமன்றத்துக்கு நேற்று முன்தினம் (05) சமர்ப்பித்தேன். பாராளுமன்ற செயலாளரினால் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு இராஜதந்திர கடவுசீட்டு விநியோகிக்குமாறு தெரிவித்து அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாகவே அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, அந்த பாராளுமன்ற உறுப்பினர் பிரிட்டன் பிரஜை என்பதால் அவருக்கு இராஜதந்திர கடவுச்சீட்டொன்று வழங்க முடியாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, சபாநாயகர் இந்த சம்பவம் தொடர்பில் ஏதாவது அறிந்திருக்கிறீர்களா? என கேட்கின்றேன் என்றார்.

இதேவேளை எதிர்க்கட்சி உறுப்பினர் சமிந்த விஜேசிறி எம்.பி. குறிப்பிடுகையில்,

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமையில் இரட்டைக் குடியுரிமையை கொண்ட பெண் எம்.பியொருவர், சட்டத்துக்கு புறம்பான வகையில் இந்த பாராளுமன்றத்தில் இருக்கின்றார். இதன்படி இந்த விடயத்தில் சபாநாயகர் முன்னெடுக்கும் நடவடிக்கை என்ன என்றார்.

இதன்போது பதிலளித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிவுறுத்துகின்றேன் என்றார். இரட்டைக்

## இராஜதந்திர மட்ட பேச்சுக்கள்...

செயற்படுத்தப்படுமா? என்று ஜே.வி.பி எம்.பி. விஜித ஹேரத் கேள்வியெழுப்பினார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி முழு அதிகாரத்தையும் தமக்கு வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

அமைச்சர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

கைது செய்யப்பட்டு நீதிமன்ற தீப்பின்படி அரசுடைமையாக்கப்படுகின்ற இந்திய இழுவை மடி வலைப் படகுகளை, தேர்ந்தெடுக்கப்படும் எமது கடற்றொழிலார்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அப்படகுகளின் தொழில் முறைமைகளை மாற்றி சட்டரீதியிலான தொழில் முறைமைக்கென வழங்கும் திட்டமும் உள்ளது.இதன் பயனாக இராட்சத இந்திய இழுவை மடி வலைப்படகுகளுக்கு முகங்கொடுத்து எமதுகடற்றொழிலாளர்களாலும் பயமின்றி கடற்றொழிலில் ஈடுபடக்கூடிய சூழலை உருவாக்குவதே நோக்கம். முள்ளை முள்ளால் எடுப்பதைப்போன்ற ஒரு செயற்பாடுதான் இது இந்திய இழுவை மடி வலைப்படகுகளின் எல்லை தாண்டியதும் சட்டவிரோமானதுமான செயற்பாடுகள் காரணமாக எமது கடல் வளம் பாரியளவில் அழிக்கப்படுவகிறது.மேலும், எமது கடற்றொழிலாளர்களின் சொத்துக்களும் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாரிய பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றது.

ஏற்கனவே, கைது செய்யப்பட்டு பழுதடைந்த இந்திய இழுவை மடி வலைப் படகுகளை பல்வேறு அழுத்தங்கள் எதிர்ப்புகள் மத்தியிலும் நாம் ஏலம் விட்டிருந்தோம்.

அந்நிதியை, மேற்படி இந்திய இழுவை மடி வலைப் படகுகள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள எமது கடற்றொழிலாளர்களுக்கு இழப்பீடாக வழங்குவதற்கு தீர்மாளித்துள்ளோம்.

அத்துடன் அரசுடைமையாக்கப்படுகின்ற இந்திய இழுவை மடி வலைப் படகுகளைத் திருத்தியமைத்து பயன்பாட்டில் ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மின் கட்டணத்தை உயர்த்தாவிடின்...

40 பில்லியன் ரூபாவையும் செலுத்த வேண்டியுள்ளதென சபையில் தெரிவித்த அவர்,

மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பதைத் தவிர விட தற்போதைய நிலையில் மாற்றுத்திட்டம் எதுவும் கிடையாதென தெரிவித்த அமைச்சர்,மின்சார சபை எதிர்கொண்டுள்ள நட்டத்தை ஈடு செய்வதானால் மின் கட்டண அதிகரிப்பை நடைமுறைப்படுத்துவது மிகவும் அவசியமென்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

கடந்த காலங்களில் மின்சார சபை எதிர்கொண்ட நட்டத்தை ஈடு செய்வதற்காகவே மின்சார கட்டணத்தை மீண்டும் அதிகரிக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவும் நாட்டு மக்களை தவறாக வழிநடத்துப் பார்க்கின்றனர். எனினும் உண்மை அதுவல்ல. தற்போதைய மின்சார உற்பத்தி செலவு மற்றும் மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ள செலவுகள் ஆகியவையே இதற்கு காரணமாகும்.

கடந்த காலங்களின் எதிர்கொண்ட நட்டத்தை முகாமைத்துவம் செய்யும் வகையில் மின்கட்டணத்தை திருத்தம் செய்யும் எவ்வித பரிந்துரைகளும் அமைச்சரவைக்கு முன்வைக்கப்படவில்லை. மின்னுற்பத்திக்கான செலவை முகாமைத்துவம் செய்தல் மற்றும் ஒரு வருடத்தில் இருமுறை மின் கட்டணத்தை திருத்தம் செய்யும் வகையிலான யோசனைகள் மாத்திரமே அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு மின்னுற்பத்திக்கான மொத்த செலவை இலங்கை மின்சார சபை மதிப்பீடு செய்து அதன் அறிக்கையை அமைச்சுக்குச் சமர்ப்பித்துள்ளது.




## மலையக தமிழர்கள் இலங்கைக்கு...

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, 1822ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் மத்திய மலைநாட்டில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் பணிப்புரிவதற்காக, ஆங்கிலேயர்கள் தமிழகத்திலிருந்து மக்களை வரவழைத்து, தோட்டங்களில் குடியமர்த்தினர். மலையக தமிழர்கள் இலங்கைக்கு வருகைதந்து 200ஆவது ஆண்டை முன்னிட்டு அதனை கொண்டாட இ.தொ.கா நடவடிக்கையெடுத்துள்ளது. இந்நிகழ்வில் கலை, கலாசாரம், பண்பாடு, இலக்கியம் மற்றும் பாரம்பரிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகளின் ஊடாக மலையக மக்களின் திறமைகளை உலகறிய செய்வதே நோக்கமாகும். இந்த விழாவில் மலையகத் தமிழர்களின் எதிர்கால பயணம் மற்றும் அவர்களுக்கான திட்டங்கள் தொடர்பில் கருத்தாடல்கள் இடம்பெறவுள்ளன. விழாவுக்கு பிரதம அதிதியாக இந்தியப் பிரதமரை அழைக்க இ.தொ.கா. நடவடிக்கையெடுத்துள்ளது. உலகளாவிய ரீதியில் பல்வேறு தலைவர்களை அழைக்கவும் இ.தொ.கா முடிவு செய்துள்ளது.

## கொழும்பில்...

பகுதியிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிறுநீரகம் மாற்று மோசடி இடம்பெற்றதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் , விசாரணைகளை மேற்கொள்ள குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார். பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில், 07 பேரடங்கிய குழுவொன்று இந்த விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளது. அதில் விசேட வைத்தியர்கள் ஐவரும், சட்ட வைத்திய அதிகாரி ஒருவரும் விசாரணை அதிகாரி ஒருவரும் அடங்குகின்றனர். சம்பவத்தின் போது விதைப்பை மாற்றப்பட்டதாக கூறப்படுகின்ற போதிலும், மருத்துவ ரீதியாகவோ அல்லது பரிசோதனை ரீதியாகவோ அவ்வாறான மாற்று அறுவை சிகிச்சை இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பில் ஊடகங்களினூடாக தகவல் வெளியிடப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறானதொரு அறுவை சிகிச்சையை மேற்கொள்வதற்கு எந்தவித அனுமதியும் வழங்கப்படவில்லை. அத்துடன் விடயத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் வைத்தியசாலையில் இது குறித்து வினவப்பட்டபோது, அவ்வாறாதொரு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

## சிங்களம், தமிழில் Domain Name ...

அத்துடன் எதிர்காலத்தில் ஈமெயில் Domain பெயர்களும் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதோடு Domain பெயரின் கீழ் சிங்கள மற்றும் தமிழ் மொழியில் ஈமெயில் விலாசங்களையும் எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ள முடியுமென கொழும்பு பல்கலைக்கழக கணினி பாடசாலையுடன்(UCSC) இணைந்த தீக்ஸன நிறுவனத்தின் தலைமை செயலதிகாரி, ஹர்ஷ விஜயவர்த்தன தெரிவித்தார்.

## எமது கடலையும், நிலத்தையும்...

ஆனால் ஒன்றை நாம் மறந்துவிட்டோம். 2023 தொடங்கியதுமே இந்நாட்டில், சின்ன வெங்காயம், உருளைக் கிழங்கு, காய்கறிகள் எல்லாவற்றுக்கும் தட்டுப்பாடு வரப்போதை நாங்கள் மறந்துவிட்டோம்.

எங்கள் மாவட்டத்தில் இந்தாண்டு பெரும்போக பயிர்ச்செய்கை வழமை போல நடக்கவில்லை. சின்ன வெங்காயம், உருளைக் கிழங்கு, காய்கறி எதுவும் இம்முறை வழமைபோல பயிரிடப்படவில்லை.

யாழ்ப்பாணத்தின் விவசாய நிலங்கள் புற்களும் புதர்களுமாக நிரம்பிக் கிடக்கின்றன. இப்போது ஒரு கிலா 400 ரூபாய்க்கு குறைவாக எந்தவொரு மரக்கறியையும் வாங்கமுடியாது. விரைவில் கையில் பணம் இருந்தாலும் கடையில் காய்கறி இல்லாத நிலைதான் வரப்போகிறது.

நாட்டின் மூன்றில் 01 பங்கு கடல் வளம் வடக்கில்தான் உள்ளது. ஆழ்கடல், குடாக்கடல், தரவைக்கடல், தீவுப் படுகைகள் என எல்லா வளங்களும் வடக்கிலுள்ளன.

இவற்றையெல்லாம் பாதுகாத்த பாரம்பரிய மீன்பிடியைதான் எங்கள் மக்கள் செய்தனர். ஆனால் இன்று டொலருக்காக கரையோரங்கள் கணக்கில்லாமல் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

இதனால், கண்டல் தாவரங்கள் அழிந்து மீன்களின் இனப்பெருக்கம் தடுக்கப்படுகிறது. இப்போதுவரை வடக்கில் 616 ஏக்கர் வரை கடல் அட்டை உற்பத்தி நடைபெறுகிறது.

ஐம்பது வருடங்களுக்கு, முன்பாகவே யாழ்ப்பாணத்தில் இயற்கையான கடலட்டைகளை பிடித்து பதப்படுத்தி வியாபாரம் செய்த உள்ளூர் வியாபாரிகள் இருந்தனர்.

ஆனால், இப்போது கடலட்டை குஞ்சுகளை பிடித்து பண்ணை அமைத்து செயற்கையாக இனப்பெருக்கம் செய்கிறார்கள். இயற்கையாக கிடைக்கும் வளத்தை அளவோடு பெறாமல் அளவுக்கதிகமாக ஆசைப்பட்டு உள்ள வளத்தையும் அழிப்பது அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதான். மீனவர்கள் இதற்கு எதிராக தொடர்ந்து போராடுகிறார்கள் என்றார்.

## டீசல் விலை குறைந்தாலும்...

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலைக்கமைய, லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தின் விலையும் குறைக்கப்பட்டுள்ளது. எனினும், ஏனைய எரிபொருட்களின் விலைகளில் மாற்றம் எற்படவில்லை. அதே விலைகள் தொடருமென அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது டீசல் விலை குறைப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ண, இந்த விலை குறைப்பு பஸ் கட்டணங்களில் தாக்கம் செலுத்தக் கூடிய அளவில் இல்லையெனக் குறிப்பிட்டார். ஒரு லீற்றர் டீசலின் விலை 35 முதல் 40 ரூபாவினால் குறைக்கப்பட்டால், பஸ் கட்டணத்தை குறைக்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

## மீனவர்களின் ... 03ஆம் பக்கத் தொடர்

தடுத்து நிறுத்த முடியும். எனவே, அமைச்சர் அவர்கள் இந்த விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டும். அதே போன்று,

நிந்தவூர் பிரதேசத்திலும் கடலரிப்பினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த மக்களின் விடயத்திலும் சிரத்தை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## வலுவான புதிய... 03ஆம் பக்கத் தொடர்

செலுத்துவதை மறுசீரமைக்க வேண்டும். மிகத் திருத்தமான பொருளாதார முறைமையொன்று அறிமுகம் செய்யப்படுதலும் அவசியம். இந்நிலைமையிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ள முடியும் என நம்பிக்கை தெரிவித்த ஜனாதிபதி, இதற்காக அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர் மட்ட ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டிருக்கிறது. அடுத்த வருடம் மின் சக்தித் துறைக்கு மாத்திரம் 300 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கிடப்படவுள்ளது.

## பாராளுமன்ற அமர்வு... 03ஆம் பக்கத் தொடர்

மூலம் ஆகியவற்றின் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தை நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

## கொலம்பியாவில் பயங்கரம்... 03ஆம் பக்கத் தொடர்

உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன், பலியானவர்களில் எட்டுப் பேர் சிறுவர்கள் என்றும் கொலம்பிய அனர்த்த முகாமைத்துவ தகவல்கள் தெரிவிக்கின்றன. மீட்கப்படும் உடல்கள், நகரத்திலுள்ள விளையாட்டு மைதானத்துக்கு கொண்டு வரப்படுவதாக பியூப்லோ ரிகோ நகர முதல்வர் தெரிவித்துள்ளார்.

## பாடசாலை மாணவர்களூடாக... 03ஆம் பக்கத் தொடர்

கிடைத்த தகவலின் பிரகாரம் நேற்றுமுன்தினம் (5) மில்லனிய மற்றும் பரகஸ்தோட்டை ஆகிய பிரதேசத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 18 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரினூடாக இந்த போதைப்பொருட்களை, இவர்கள் மாணவர்களுக்கு விற்பனை செய்ததாக விசேட அதிரடிப்படையினர் தகவல் வெளியிட்டுள்ளனர். சந்தேக நபர்கள் மில்லனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## ரஷ்ய தூதுவருடன்... 03ஆம் பக்கத் தொடர்

நினைவுச்சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

ரஷ்ய தூதுகர பாதுகாப்பு ஆலோசகர் கேணல் அலெக்ஸி பொண்டரேவ், இலங்கை பாதுகாப்பு அமைச்சின் உதவி இராணுவ இணைப்பு அதிகாரி, கேணல் துசிஸ்த பண்டார மற்றும் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (பாதுகாப்பு) ஹர்ஷ விதானராச்சி ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## 2022 அரையாண்டில்... 03ஆம் பக்கத் தொடர்

டொலரை பெற்றுக்கொள்ளல் மற்றும் 2026 ஆண்டளவில் ஏற்றுமதி வருமானத்தை 15 பில்லியன் டொராக அதிகரித்தல் என்பவற்றுக்காக முதலீட்டு சபையின் பங்களிப்பை நூற்றுக்கு 70 வீதம் வரை அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# நகர்வலம்



# காட்டு யானைகள் ஊடுருவுவதை தடுக்க அநுராதபுரத்தில் மின்வேலி அமைக்கும் திட்டம்

## இவ்வாண்டில் 395 காட்டு யானைகள், 127 மனிதர்களும் உயிரிழப்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

யானை _ மனித மோதலினை கட்டுப்படுத்துவதற்காக வேண்டி இனங் காணப்பட்டுள்ள இடங்களுக்கு மின்சார வேலியினை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்ற காலங்களில் இம்மாவட்டத்திலுள்ள விவசாயிகள் மாத்திரம் அல்லாது ஏனைய மாவட்டங்களிலும் உள்ள விவசாயிகள் விவசாய நிலங்களில் விவசாய நடவடிக்கையில் ஈடுபடாது வீதிகளில் போராட்டம் நடத்தியதை நாம் கண்டோம். அது எங்களுக்கும் பாரிய சவாலாக காணப்பட்டதாக விவசாய வனவள அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதியில் யானை _ மனிதர்கள் மோதலின் போது 395 காட்டு யானைகளும் 127 மனிதர்களும் உயிரிழந்துள்ளதாகவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.



அநுராதபுரம் அரசாங்க அதிபர் அலுவலக கேட்போர் கூடத்தில் விவசாயத்துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் வனஜீவராசிகள் திணைகள அதிகாரிகள் வனவள அதிகாரிகளுடனான விசேட சந்திப்பு அண்மையில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், அநுராதபுரம் வனஜீவராசிகள் வலயத்தில் 72 காட்டுயானைகளும் 32 மனிதர்களும் உயிரிழந்துள்ளன.

அரசாங்கம் என்ற வகையில் விவசாயிகளது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். இப்போது விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உரங்களும் வழங்கப்படுகின்றன. அதனால் நாங்கள் எதிர்பார்த்ததை விடவும் அதிகமான அளவு நிலப்பரப்பில் நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் நெல்லின் விலையில் வீழ்ச்சி காணப்படுகின்றது. அதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்கான தீர்வினை விரைவில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். தற்போது நாட்டில் போதியளவு நெல் கையிருப்பில் காணப்படுகின்றது. அதனால் வெளிநாட்டிலிருந்து அரிசியினை இறக்குமதி செய்வதற்கான தேவை இல்லை. அதனை நான் தெளிவாக கூறவிரும்புகின்றேன் என அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்தார்.



தென்னிந்தியாவிற்கான இலங்கையின் பிரதி உயர் ஸ்தானிகர் டாக்டர் டி.வெங்கடேஷ்வரன் கடந்த 02 ஆம் திகதி சென்னையில் உள்ள மகாபோதி மையத்திற்குச் சென்று பிரதமகுரு வண. நுககொல்லே சந்திரரத்ன தேரரை சந்தித்து உரையாடி ஆசிகளை பெற்றபோது எடுத்த படம்.

# இந்திய பேராசிரியர் ஜவாஹிருல்லா எழுதிய நூல் கொழும்பில் வெளியீடு

## பிரதம அதிதியாக அமைச்சர் அலி சப்ரி பங்கேற்பு



தமிழ்நாடு சட்டசபை உறுப்பினரும் பிரபல பேச்சாளருமான பேராசிரியர் ஜவாஹிருல்லா எழுதியுள்ள "நபிகளாரின் சமூக உறவு" எனும் நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 09ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4:30 மணிக்கு கொழும்பு தபாலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்காவின் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

அத்தோடு, சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் றிஷாத் பதியுதீன், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், காலைக்கதிர் ஆசிரியர் வித்தியாதரன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் அகில இந்திய யூனியன் ஒப் முஸ்லிம் லீக்கின் தலைவர் பேராசிரியர் காதர் மொஹிதீன் சிறப்பு பேச்சாளராகவும் கலந்து கொள்வார் என முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்கான் பீ இப்திகார் தெரிவித்தார்.

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

# கண்டியின் சில பகுதிகளில் நீர் விநியோகத் தடை

**பேருவளை விசேட நிருபர்**

பாரிய கண்டி நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுகஸ்தோட்டை, யட்டிவாவெல நீர் இரைக்கும் நிலையத்தில் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் நாளை 08ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9 மணி முதல் பி.ப. 5 மணி வரையிலான 8 மணிநேர நீர் விநியோகத்தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

கொண்டதெனிய, குளுகம்மன, நுகவெல, ரஜபிகில்ல, மெதவெல, குருகொட, தெலும்புகஹவத்த ஆகிய பிரதேசங்களில் நீர் விநியோகம் தடைப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

# சீனன்கோட்டை இரத்தினக்கல் வர்த்தக சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

## பிரதம அதிதியாக சர்வதேச புகழ்பெற்ற இரத்தினக்கல் வர்த்தகர் பங்கேற்பு

**பேருவளை விசேட நிருபர்**





சீனன்கோட்டை இரத்தினக் கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் மாநாடும் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை பேருவளை 'சினமன் பே' ஹோட்டலில் சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மர்ஜான் பளீல் தலைமையில் நடைபெறவுள்ளது.

"அனைவரும் ஒன்றுபடுவோம்" எனும் தொனிப்பொருளில் நடைபெறும் இம்மாநாட்டில், இரத்தினபுரி மற்றும் கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளிலுள்ள முன்னணி இரத்தினக்கல் வர்த்தகர்கள் பங்குபற்றுவார்கள்.

இரத்தினக்கல் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களின் மிகப்பெரிய கூட்டமாக இதனை அடையாளப்படுத்த முடியுமென சங்கத்தின் செயலாளர் லியாகத் ரஸ்வி தெரிவித்தார்.

இம்மாநாட்டில் பிரான்ஸ், ஹொங்கொங், தாய்லாந்து, அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் கிளைகளைக் கொண்ட சுவிட்சர்லாந்தை தளமாகக் கொண்ட சர்வதேச அளவில் புகழ்பெற்ற இரத்தினக்கல் பரிசோதனை ஆய்வுகூடத்தின் தலைவர் உலகப் புகழ்பெற்ற இரத்தினக்கல் நிபுணர் கலாநிதி ஏ. பெரெட்டி பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

நிகழ்வில் இரத்தினக்கல் பட்டை தீட்டும் இயத்திரங்களும் இரத்தினக் கல் பட்டைதீட்டல் பயிற்சிபெற்ற சிலருக்கு வழங்கப்படவுள்ளன.

இலங்கையின் மிகப்பெரிய இரத்தினக்கல் சங்கமான சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கம், நாடளாவிய ரீதியில் 2000க்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. சீனன்கோட்டை இரத்தினக்கல் சந்தையானது உலகின் மிகப்பழமையான மற்றும் மிகப் பெரிய சந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை உயரதிகாரிகள், சீனன்கோட்டை இரத்தினக் கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்க உறுப்பினர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொள்வர். அதேசமயம் அன்றையதினம் காலை பிரதம அதிதி சர்வதேச புகழ்பெற்ற சீனன்கோட்டை பத்தை இரத்தினக்கல் வர்த்தக சந்தை தொகுதிக்கும் விஜயம் செய்வதோடு, சீனன்கோட்டை ஜெம் டவர் கட்டடத்தில் இரத்தினக்கல் பட்டைதீட்டும் பயிற்சி நிலையத்தையும் திறந்து வைப்பார்.



தர்காநகர் கல்விமான் மர்ஹும் ஐ.எல்.எம். சுஐப் ஆசிரியர் தொடர்பில் எழுதப்பட்டுள்ள கட்டுரைகள் அடங்கிய நூலான, 'வாழும் ஆளுமை அல் ஹாஜ் ஐ.எல்.எம். சுஐப் நினைவுக் குறிப்புகள்' என்ற தலைப்பிலான நூல் தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் ரி. செந்தில்வேலவருக்கு களுத்துறை மாவட்ட எழுத்தாளர் ஒன்றியத்தின் செயலாளர் எம். பாஸி சுபைரினால் தினகரன் ஆசிரியர் பீடத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம். தினகரன் இணையாசிரியர் மர்லின் மரிக்காரும் படத்தில் காணப்படுகிறார்.



பேராதனைத் தமிழ்த்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளரும் கவிஞரும் ஆய்வாளருமான கலாநிதி செ.சுதர்சன் எழுதிய காலிமுகம் 22 என்ற கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா அண்மையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பேராசிரியர் தலைமை உரையாற்றுவதையும் நூல் வெளியீட்டு நிகழ்வினையும் நூலாசிரியர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# ஹம்பாந்தோட்டை ஸாஹிராவிலிருந்து 10 பேர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு

**ஹம்பாந்தோட்டை தினகரன் நிருபர்**

அண்மையில் வெளியான பல்கலைக்கழக வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையிலிருந்து 2021 ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 10 பேர் முதல் தடவையாக பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் எம்.எம்.எம். ரிஸான் தெரிவித்தார்.

நீண்டகால இடைவெளிக்குப் பிறகு இம்முறையே ஸாஹிரா தேசிய பாடசாலையிலிருந்து அதிக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இவர்களில் மாணவிகளான எம். ஐ. இஸ்லா, எப். ஆதிலா சுஹூட், எம். ஏ. எப். இமாஸா, ஏ. ஐ. ஏ. இஜாஸ், எம். எஸ் ஸஹானா, எம். என் எப். ரிப்கா, எப். என். எப். சமீலா, எம். ஆர். எப். ருமைஸா, எம். ஏ. எப். ருகையா, என். பர்ஹா ஹஸன் ஆகியோர் நாட்டிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டு பாடசாலைக்கு புகழ் சேர்த்துள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

வரலாற்று சிறப்புமிக்க சிறந்த பெறுபேற்றினை பெறுவதற்கு தனக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்கிய பாடசாலையின் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட சம்பந்தப்பட்ட அனைவருக்கும் பாடசாலையின் அதிபர் எம். எம். எம். ரிஸான் நன்றி தெரிவித்துள்ளார்.

# பம்பலபிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி வருடாந்த பொதுக்கூட்டம்

**ருஸைக் பாரூக்**

கொழும்பு பம்பலபிட்டிய முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 09ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவியர் சங்கத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளவர்கள் பிற்பகல் 2.30 மணிக்குள் கல்லூரி மண்டபத்திற்கு வருகை தந்து ஒத்துழைப்பு வழங்குமாறும் செயலாளர் சஹாரா பாரூக் கேட்டுள்ளார்.

# கியூபா தூதுவருடன் இளைஞர் பாராளுமன்ற பிரதியமைச்சர் சந்திப்பு

**ருஸைக் பாரூக்**

இலங்கைக்கான கியூபா நாட்டின் தூதுவர் Andres Marcelo Gonzalez Garrido அவர்களை இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் அண்மையில் கியூபா தூதரகத்தில் சந்தித்தார்.

இச்சந்திப்பில் கியூபாவிற்கும் இலங்கைக்கும் இடையே உள்ள வெளிவிவகார மற்றும் ராஜதந்திர உறவுகளின் நிலைமை தொடர்பாகவும் இலங்கையின் தற்போதைய நிலவரங்கள் அதில் பிரதானமாக இளைஞர்கள் முகம் கொடுக்கும் சவால்கள் மேலும் இளைஞர்களுக்கான வெளிவிவகார வாய்ப்புகள் உட்பட துறைசார் வகிபாகங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டன.



மேலும் இக்கலந்துரையாடலின் போது கியூபா நாட்டின் தூதுவர் Andres Marcelo Gonzalez Garrido குறிப்பிடுகையில், கியூபா நாட்டின் பாராளுமன்றத்தில் பெண்களுடைய பிரதிநிதித்துவம் உலகளாவிய ரீதியில் அதிகூடியளவிலான பெண்கள் (50%) பாராளுமன்றத்திற்கு உள்வாங்கப்படுகின்ற நாடுகளுள் இரண்டாவது நாடாக கியூபா திகழ்கிறது என தெரிவித்தார்.

மேலும், கியூபா மருத்துவத் துறை தொடர்பான கற்கை நெறிக்கு மிகவும் பிரபல்யமான நாடாகும் எனவும் இலங்கையில் உள்ள இளைஞர்களின் மருத்துவத்துறை தொடர்பான கற்கை நெறியை புலமைப்பரிசில் மூலமாக கியூபாவிற்கு சென்று பூரணப்படுத்துவதற்கான வாய்ப்புகள் அன்று போலவே இன்றும் நடைமுறையில் இருக்கின்றன எனவும் அவர் நினைவுபடுத்தினார்.



மாவனல்லை "எசோஸியேசன் போ பிடன்" ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாமொன்று, மாவனல்லை புளுபிடிய தக்கியாவில் அண்மையில் நடைபெற்றது. இவ் நிகழ்வில், இலவச சிறுநீர் மற்றும் இரத்த மருத்துவ பரிசோதனைகளும் இலவச கண் பரிசோதனைகள் நிகழ்வும் நடைபெற்றதை படத்தில் காணலாம்.
(படம்: அரநாயக்க விஷேட நிருபர்)

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 21ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஊலா பிறை 12

**குறள் தரும் சிந்தனை**



நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை

மனவேறுபாடு கொள்ளாமல் தன்னால் இயலும் வழிகளிலெல்லாம் துணைநின்று நண்பனைத் தாங்குவதுதான் நட்பின் சிறப்பாகும்.

# பொருளாதார நெருக்கடிக்கு தேர்தல் தீர்வைத் தராது!

நாட்டிலுள்ள சில எதிர்க்கட்சிகள் தேர்தல் ஒன்றை நடத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளன. இக்கோரிக்கையின் அடிப்படையில் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவும் அக்கட்சிகள் திட்டமிட்டுள்ளதோடு அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளன.

ஆனால் இவ்வருடத்தின் ஆரம்பத்தில் இந்நாடு முகம்கொடுக்கத் தொடங்கிய பொருளாதார நெருக்கடி முற்றாக நீங்கி நாட்டில் இன்னும் இயல்புநிலை ஏற்படவில்லை. ஆனால் இப்பொருளாதார நெருக்கடி கடந்த ஏப்ரல் முதல் ஜுலை வரையான காலப்பகுதியில் தீவிர நிலையை அடைந்ததோடு மக்கள் முன்னொரு போதும் எதிர்கொண்டிராத நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்தனர்.

இவ்வாறான சூழலில், கடந்த ஜுலை மாதப் பிற்பகுதியில் நாட்டின் தலைவராகப் பதவியேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களை திட்டமிட்ட அடிப்படையில் விரிவாக முன்னெடுக்கலானார். அத்திட்டங்களின் விளைவாக எரிபொருள், எரிவாயு உட்பட பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. வீதிப் போக்குவரத்து உள்ளிட்ட அனைத்து சேவைகளும் பெரும்பாலும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் முன்னெடுத்த திட்டங்களின் பிரதிபலன்களே இவை. இத்திட்டங்களின் நன்மைகளை மக்கள் அனுபவிக்கவும் ஆரம்பித்து விட்டனர். அத்தோடு நாடு முகம் கொடுத்திருந்த பொருளாதார நெருக்கடியின் தீவிரத்தன்மையில் வீழச்சியும் ஏற்படத் தொடங்கி விட்டது.

இருந்த போதிலும் இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடும் மக்களும் இன்னும் முழுமையாக மீட்சி பெறவில்லை. இது மறைக்க முடியாத உண்மையாகும்.

அதேநேரம் தற்போது நாடு முகம்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியானது தனித்தனியாகப் பிரிந்து நின்று தீர்வு காணக்கூடிய ஒன்று அல்ல. இது ஒரு தேசியப் பிரச்சினை. இப்பிரச்சினைக்கு இந்நாட்டில் வாழும் எல்லா பிரஜைகளுமே முகம் கொடுத்திருக்கின்றனர். இது தனியே ஒரு கடசியினரை மாத்திரம் பாதித்திருக்கும் பிரச்சினையும் அல்ல. அதனால் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் எல்லோரும் ஒன்றுபட்டு நாட்டையும் மக்களையும் இந்நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்க வேண்டும். அதுதான் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பும் ஆகும்.

இப்பின்புலத்தில்தான் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க ஒன்றுபடுமாறு ஜனாதிபதி ஏற்கனவே அழைப்பும் விடுத்து இருக்கின்றார்.

ஆனால் மக்களின் எதிர்பார்ப்பையும் அவர்களது உணர்வுகளையும் உரிய முறையில் புரிந்து கொள்ளத் தவறியுள்ள ஒரு சில அரசியல் கட்சிகள்தான் தற்போது தேர்தலை நடத்துமாறு கோரிக்கை விடுத்திருக்கின்றன என்பதுதான் மக்களின் கருத்தாகும். இதனை ஒரு வேடிக்கையான கோரிக்கையாகவே அநேகர் நோக்குகின்றனர். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போன்ற ஒரு கோரிக்கை இது.

ஏனெனில் தேர்தல் என்பது நினைத்த மாத்திரத்தில் நடத்தி விடக்கூடிய ஒன்று அல்ல. அது அதிக செலவை மேற்கொள்ள வேண்டிய ஒரு நடவடிக்கை. குறிப்பாக ஒரு தேர்தலை நடத்தி முடிப்பதற்கு கோடிக்கணக்கில் செலவிட்டாக வேண்டும். தற்போதைய சூழலில் அவ்வாறானதொரு செலவை மேற்கொள்ளக் கூடிய நிலையில் நாட்டின் பொருளாதாரம் இல்லை.

இந்நிலைமையைக் கருத்தில் கொள்ளாது தேர்தலொன்று நடத்தப்படுமாயின் நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி மேலும் தீவிர நிலையை அடையுமே தவிர குறைவடையாது. அதன் விளைவாக தற்போது மக்கள் அனுபவிக்கும் அனுகூலங்களை அவர்கள் இழக்க வேண்டிய நிலையும் கூட ஏற்பட முடியும்.

அதேநேரம், தேர்தல் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக அமையப் போவதுமில்லை. நாட்டையும் மக்களையும் அந்நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்கக் கூடியதும் அல்ல. மாறாக இந்நெருக்கடியை மேலும் அதிகரிக்கவே வழிவகுக்கும்.

அதன் காரணத்தினால்தான் தற்போதைய சூழலில் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சியையும் நிவாரணத்தையும் மக்கள் எதிர்பார்க்கின்றனரே தவிர தேர்தலை அல்ல. அதனால் மக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட மக்கள் பிரதிநிதிகள் முன்வர வேண்டும். இன்றைய சூழலில் அதுவே அவர்களது பொறுப்பும் கடமையும் ஆகும். நாட்டினதும் மக்களினதும் பொருளாதார மீட்சிக்கு இது பக்க பலமாகவும் அமையும் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# இந்துக்களின் பக்திபூர்வமான கார்த்திகை விளக்கீடு திருநாள்

கார்த்திகை தீபம் என்பது கார்த்திகை மாத பௌர்ணமி நாளும் கார்த்திகை நட்சத்திரமும் சேர்ந்த திருக்கார்த்திகை நாளில் தமிழர் தமது இல்லங்களிலும் கோயில்களிலும் பிரகாசமான தீபங்களை ஏற்றி மகிழ்ச்சியாகக் கொண்டாடும் ஒரு தீபத் திருநாள் ஆகும். கார்த்திகைப்பூ என்றும் காந்தள் மலர் என்றும் இலக்கியங்களில் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்ற மலரானது கார்த்திகை விளக்கீடு காலத்தில் மலர்ந்திருப்பது சிறப்பம்சமாகும்.

கார்த்திகை எனப்படும் விண்மீன் கூட்டம் கீழ்வானில் மாலையில் தோன்றும் மாதம் கார்த்திகை மாதம் ஆகும். தமிழர்கள் தம் இல்லங்களில் 27 தீபம் ஏற்றுவது இன்றைய நாளின் சிறப்பு. இவை அஷ்வினி முதல் ரேவதி வரையான 27 நட்சத்திரங்களைக் குறிக்கும். பண்டைய தமிழர்கள் ஒரு மாதத்தில் உள்ள நாட்களை 27 நட்சத்திரங்களின் பெயர்களால் வழங்கி வந்தனர். அந்நட்சத்திரங்களில் ஒரு தினமான கார்த்திகைநாள் இன்றாகும். இவ்வாறு ஒவ்வொரு மாதமும் வருகின்ற கார்த்திகைநாள் முக்கியமான நாளாகத் தமிழர்களால் வழிபடப்பட்டு வருகின்றது.

மாலை வேளையில் வீடுகளின் வெளிப்புறங்களிலும், வீட்டு முற்றத்திலும் விளக்கேற்றிக் கொண்டாடுவார்கள். திருக்கார்த்திகை தினத்தன்று ஆலயங்களில் தீபத்திரு விழா நடைபெறும். பக்தர்கள் தீபவிளக்குகள் ஏற்றி வைத்து வழிபடுவர். ஆலயத்தின் முன்புறத்தே வாழைமரம் நட்டு பனையோலைகளால் அதனைச் சுற்றி அடைத்து 'சொக்கப்பனைக்கு' அக்கினியிட்டு ஜோதி வடிவாகக் காட்சியளிக்கச் செய்து சிவபெருமான் சோதிப் பிழம்பாகத் தோன்றிய காட்சியை நினைவு கூர்ந்து வழிபடுவர். இல்லங்களையும், வர்த்தக நிலையங்களையும் விளக்குகளால் அலங்கரித்து ஒளி வெள்ளத்தில் மிதக்க வைத்து வழிபடுவர்.

படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மனும், காத்தல் தொழிலைச் செய்யும் விஷ்ணுவும்

நானே பெரியவன் என்று வாதாடிப் பல வருடங்கள் போரிட்டனர். சிவபெருமான் சோதிப்பிழம்பாகத் தோன்றினார். அடியையும் முடியையும் தேடும்படி அசரீரி கூறியது. இருவரும் அடிமுடி தேடிக் காணமுடியாமல் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று ஏற்றுக் கொண்டனர். அவர்கள் இருவரும் தாம் கண்ட ஜோதியை எல்லோரும் காணும்படி காண்பித்தருள வேண்டும் என்று வேண்ட அவர் திருக்கார்த்திகை நட்சத்திரத்தன்று காண்பித்தருளினார். இந்தத் தத்துவத்தை விளக்குவதே கார்த்திகைத் தீப வழிபாடாகும்.



தமிழகத்தில் பஞ்சபூத திருத்தலங்களில் அக்னிக்குரிய திருத்தலமான திருவண்ணாமலையில் இக்கார்த்திகை விழா 'மகாதீபம்' எனும் திருநாமத்துடன் வெகுவிமரிசையாக அனுஷ்டிக்கப்படுகின்றது. இது திருவண்ணாமலையின் சிகரத்தின் மீது தீபம் ஏற்றும் விழாவாகும். இம்மகாதீபம் இலக்கியங்களில் 'சர்வாலய தீபம்' மற்றும் 'கார்த்திகை விளக்கீடு' என்றும் அழைக்கப்படுகிறது. திருவண்ணாமலையில் தீபத் திருநாளன்று அதிகாலையில் மலையடிவாரத்தில் ஏற்றப்படுவதைப் பரணி தீபம் என்றும், மாலையில் மலையுச்சியில் ஏற்றப்படுவதை மகாதீபம் என்றும் குறிப்பிடுகிறார்கள். இத்தீபம் சிவன் அக்னி பிழம்பாக, நெருப்பு மலையாக நின்றார் என்ற ஐதீகப்படி மலையில் ஏற்றப்படுகிறது.

இத்தீபம் ஏற்றும் மலையானது 2668 அடி உயரம் கொண்டது. இம்மலை மீது செம்பு, இரும்பு கொண்டு தயாரிக்கப்பட்ட கொப்பரையில் தீபம் ஏற்றுவர்.

1668 இல் பிரதானி வேங்கடபதி ஐயர் என்பவர் வெண்கலத்தை கொப்பரையாகச் செய்து கொடுத்தார். பின்பு 1991 இல் இரும்பினால் உருவாக்கப்பட்ட கொப்பரை தற்போது உள்ளது. இது பக்தர்களின் உபயம் ஆகும். இக்கொப்பரையை மலை மீது வைக்கும் உரிமை பெற்றவர் பர்வத ராஜகுலத்தினர் (மீனவர்) ஆவர். இத்தீபம் சுமார் 3000 கிலோவுக்கும் மேற்பட்ட நெய்யும், 1000 மீட்டர் காடா துணியும் பயன்படுத்தி ஏற்றப்படுகிறது.

இம்மகாதீபம் ஏற்றுகின்ற உரிமை பர்வத ராஜகுலத்தினர் பெற்றுள்ளனர். இவர்கள் 'செம்படவர்கள்' எனப்படுவர். சிவன் படையினர் செம்படவர்கள். இதன் நினைவாக இவர்களுக்கு இவ்வுரிமை வழங்கப்படுகிறது. இவர்கள் தங்களுக்குள் முறை போட்டுக் கொண்டு ஆண்டுதோறும் மலைமீது தீபம் ஏற்றுகின்றனர்.

மலையில் தீபம் ஏற்றுவதற்கு முன்பு கோயிலில் பஞ்சமூர்த்திகளுக்குத் தீபதரிசனம் காண்பிக்கப்படும். இந்நேரத்தில் பக்தர்கள் கூட்டம் கோவிலில் இத்தீபத்தைக் காண அலைமோதும். அப்பொழுது அடியார்கள் 'அண்ணாமலை யாருக்கு அரோகரா' என்று முழக்கம் இடுவார்கள்.

கார்த்திகை தீபத்தன்று திருவண்ணாமலையை வலம் வருதல் மிகவும் சிறப்பானது. அந்நாளில் வலம் வருவதால் அவர்களுக்குப் பாவவிமோசனம் கிடைக்கும், கர்ம வினைகள் நீங்கும் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

இலங்கை, இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர், மொரீஷியஸ் மற்றும் இந்துக்கள் செறிந்து வாழும் தேசங்களில் கார்த்திகை தீபத்திருநாள் வெகுவிமரிசையாக பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகத்துக்கு பட்டிருப்பில் நாளை பாராட்டு விழா

மனிதவாழ்க்கையை நன்கு திட்டமிட்டு வாழ்பவர்கள் மகிழ்ச்சிகரமாக வாழ்வதுடன், பிறர் மகிழ்ச்சியாக வாழ்வதற்கும் துணையாகின்றனர். இவர்கள் சமூகத்திற்கு முன்மாதிரியாக வாழ்கின்றனர். இவர்களை சமூகம் வாழும் போதே வாழ்த்துகின்றமை மகிழ்ச்சிதரும் செய்தியாகும்.

இந்த வகையில் ஆசிரியையாக கல்விப்பணியைத் தொடங்கி தனது அயராத முயற்சியினால் படிப்படியாக உயர்வு பெற்று கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவியை அலங்கரிக்கும் கல்விப்புல பேராளுமை திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் அவர்களுக்கு பட்டிருப்பில் மகத்தான மணிவிழா நாளை (2022.12.08) நடைபெறவுள்ளது.

கல்விச் சமூகத்தினால் விழாவெடுத்து கௌரவிக்கப்படவுள்ள திருமதி நகுலேஸ்வரிபுள்ளநாயகம் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்எல்லையில் நீர்வளமும் நிலவளமும் கல்வி மற்றும் கலைவளமும் நிறையப் பெற்ற பழந்தமிழ்க் கிராமமான துறைநீலாவணையில் 1962.01.27 அன்று சோதிடர் கதிரவேல்_ வள்ளிப்பிள்ளை தம்பதியருக்கு இளைய மகளாகப் பிறந்தார்.

இவர் தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியை துறைநீலாவணை மகாவித்தியாலயத்திலும்(தேசிய பாடசாலை), உயர்கல்வியை வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்திலும் (உயர்தர விஞ்ஞானப் பிரிவில்) கற்றார்.

இலங்கை ஆசிரிய சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று 1988. 08. 22 அன்று ஆசிரியப் பணியை துறைநீலாவணை மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பித்தார். இக்காலப் பகுதியில் பேராதனை பல்கலைக் கழகத்தில் இளமானிப் பட்டத்தை பூர்த்தி செய்தார். இதனைத் தொடர்ந்து 1989ஆம் ஆண்டு துறைநீலாவணை மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று அங்கு விஞ்ஞான பாடஆசிரியையாக சிறப்பான பணி செய்தார்.

இதனைத் தொடர்ந்து இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையில்1993. 06. 01 இல் சித்தி பெற்றார். இப்பரீட்சையில் சித்தி பெற்றவர்களுள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிக மதிப்பெண்ணைப் பெற்று முதல் நிலையானார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் இரண்டுக்கு 2003.05.12 இலும், தரம் ஒன்றுக்கு 2009. 01. 01 இலும் என பதவி உயர்வு பெற்றார். கிழக்கு மாகாணத்தின் கல்வி வரலாற்றில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவி வகித்த முதலாவது பெண் என்ற பெருமையை அவர் தனதாக்கிக் கொண்டார்.

தனது தொழில்வாண்மையை உயர்த்தும் வகையில் தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் கல்வி முதுமாணி பட்டத்தை பூர்த்தி செய்தார். கல்வி அபிவிருத்தி டிப்ளோமா, திட்டமிடல் டிப்ளோமா என்பவற்றையும் இதே நிறுவனத்தில் பயின்று பூர்த்தி செய்தார்.



**கிழக்கின் கல்வித்தரத்தை உயர்நிலைக்குக் கொண்டு வருவதற்கு சிறப்பான நிர்வாகத்தை வழங்கிய ஆளுமை நிறைந்த பெண்**



மேலும் மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளுக்கு 2002, 2016, 2018 ஆகிய ஆண்டுகளில் புலமைப் பரிசில் பெற்று தனது நிர்வாகத்திறனை வலுவாக்கினார்.

தொட்ட பணிகளைத் துலங்க வைக்கும் கல்விப்புல பேராளுமையான இவர், பல்வேறுபட்ட சவால்களையும் விமர்சனங்களையும் எதிர்கொண்டு 2021 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் ஒன்பது மாகாணங்களிலும் கிழக்கு மாகாணம் முதலாம் இடத்தைப் பிடிக்க சிறந்த நிர்வாகத்தை வழங்கினார். அவ்வாறான சிறந்த நிர்வாகத்தை வழங்கிய மாகாணக் கல்விப் பணிப்பாளர் என்ற பெருமையையும் பெற்றார்.

பட்டிருப்பு, திருக்கோவில் கல்வி வலயங்களில் வலயக் கல்விப்பணிப்பாளராகப் பணியாற்றி மாணவர்கள் கல்வி மற்றும் இணைக்கலைத் திட்டங்களில் வியத்தகு பெறுபேறுகளைப் பெறவும் சாதனைகளைப் படைக்கவும் சிறந்த நிர்வாகத்தை வழங்கினார்.

இவர் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய போது படுவான்கரைப் பிரதேசத்திலுள்ள மாணவர்களின் கல்வி நலனில் அக்கறை கொண்டு காத்திரமான சேவையாற்றியுள்ளதுடன் பல பாடசாலைகளை தரமுயர்த்தியுமுள்ளார்.

இவரின் கல்வி மற்றும் ஏனைய பணிகளைப் பாராட்டி நாளை நடைபெறும் (2022.12.08) மணிவிழாவை பதிவாக்கும் வகையில் 'நகுலம்' சிறப்பு மலர் வெளியிடப்படவுள்ளது.

விழாக்குழுத் தலைவரும் அதிபருமான ரி.சபேசன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர்.கலாநிதி.மூ. கோபாலரெத்தினம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு விழாநாயகியை பாராட்டிக் கௌரவிக்கவுள்ளார்.



**செல்லையாபேரின்பராசா...**
(துறைநீலாவணை நிருபர்)

# வாசகர் உள்ளத்தில் மறையாமல் வாழும் எழுத்தாளர் அகஸ்தியர்

தனது 20 ஆவது வயதில் கவிதை மூலம் ஈழத்தின் மூத்த எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் எழுத்துலகுக்கு அறிமுகமானார். சுதந்திரனில் எழுதத் தொடங்கியவர் தினகரன், வீரகேசரி, தினபதி, ஈழநாடு, மல்லிகை, சுடர் ஆகிய பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதினார்.

ஓகஸ்ட் 29, 1926 இல் பிறந்த எஸ். அகஸ்தியர் டிசம்பர் 8, 1995 இல் பாரிசில் மறையும் வரை தலைசிறந்த எழுத்தாளராகவே விளங்கினார். ஈழத்து இலக்கிய ஆக்கத்தின் பாரம்பரியத்தையும் தோற்றத்தையும், வளர்ச்சியைப் பார்க்கும்போது அகஸ்தியரும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் பின்னிப் பிணைந்திருப்பதை அறிந்து கொள்ள முடியும்.

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையில் பிறந்த அகஸ்தியர் சிறுகதைகள், குறும்புதினங்கள், புதினங்கள், மேடை நாடகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் எனப் பல கோணங்களிலும் எழுதியவர். 1986 ஆம் ஆண்டில் புலம்பெயர்ந்து பிரான்சில் வாழ்ந்து வந்தார். எழுத்து, தீபம், கண்ணதாசன், கலைமகள், தாமரை போன்ற தமிழக இதழ்களும் இவரது சிறுகதைகளைப் பிரசுரித்தன. தாமரை இதழ் 1970 ஆம் ஆண்டில் இவருடைய படத்தை அட்டையில் பிரசுரித்தது.

அவருடைய நூல்கள் இருளினுள்ளே, திருமணத்திற்காக ஒரு பெண் காத்திருக்கிறாள், மண்ணில் தெரியுதொரு தோற்றம், கோபுரங்கள் சரிகின்றன, எரிநெருப்பில் இடைபாதை இல்லை, நரகத்திலிருந்து, பூந்தான் யோசேப்பு வரலாறு, மகாகனம் பொருந்திய, எவளுக்கும் தாயாக, அகஸ்தியர் பதிவுகள், கலை இலக்கியமும் வர்க்க நிலைப்பாடும், அகஸ்தியர் கதைகள் ஆகியனவாகும். அகஸ்தியரின் வாழ்வையும் பணிகளையும் பற்றிய பல கட்டுரைகள் பலரால் எழுதப்பட்டுள்ளன.



தனது இளம் பராயத்திலேயே இலக்கிய உலகில் பிரவேசித்து, இலங்கையில் வெளியான பல பத்திரிகைகள், இதழ்களில் கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம், கட்டுரை, உணர்வூற்று உருவகம், நாடகம், இலக்கிய வரலாறு முதலான சகல கலை, இலக்கியத்துறைகளிலும் தொடர்ச்சியாக அயர்ச்சியின்றி எழுதியவர். தனது ஆக்க இலக்கியங்களின் கருப்பொருளாக அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களின் மீட்சியை சமுதாயப் பார்வையுடனும், பரிசுத்த நேசிப்புடனும் நோக்கினார்.

அவரது நூல்கள் இலங்கையிலும் தமிழ்நாட்டிலும், பிரான்ஸிலும் வெளியாகியுள்ளன. 1946 இல் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தோற்றிவிக்கப்பட்டபோது, தன் இளம் வயதின் கருத்தியல்களை அதில் பிரதிபலிக்கும் நோக்குடன் இணைந்து கொண்டு செயலாற்றினார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைமைக்குழுவில் இணைந்திருந்தவர். தனது படைப்புகளை வெளியிடத் தயங்கிய பத்திரிகை, இதழ்களின் ஆசிரியர்களுடனும் எந்தத் தயக்கமும் இன்றி நேரடியாக கருத்து மோதல்களில் ஈடுபடும் இயல்பும் கொண்டிருந்தவர்.

1960 ஆம் ஆண்டுகாலங்களில் இலங்கையில் சாதித்தியம் பெருநெருப்பு கொழுந்துவிட்டு எரிந்த காலத்தில் எழுதப்பட்ட 'எரிநெருப்பில் இடைபாதையில்லை' என்ற நாவல் ஈழத்தில் எழுந்த முதல் 'தலித்திய' நாவல் என்னும் சிறப்பினைப் பெற்றுள்ளது. தர்மாவேச பண்புகள் அவரிடமிருந்தபோதிலும் குழந்தைகளுக்குரிய மென்மையான இயல்புகளினாலும் தனிப்பட்ட விருப்பு வெறுப்பின்றி அனைவரையும் அன்போடு அணைத்தவர். ஈழத்தின் பிரபல முற்போக்கு எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் இலக்கியம் மூலம் தாம் எண்ணித் துணிந்த தேசப் பணியொன்றினைச் செய்வதாகவே அவர் கருதிச் செயற்பட்டார்.

மனிதநேயத்தை நேசித்த இலக்கியவாதி அகஸ்தியர் தனது இலக்கியப் படைப்புக்களில் ஈழத்தில் உள்ள பல கிராமங்களின் பேச்சுவழக்கினையும், யாழ்ப்பாண மக்களின் பேச்சுவழக்கினையும், மலையக முஸ்லிம் மக்களின் பேச்சு வழக்கினையும் சுவாரஸ்யத்துடன் எழுதுவதும், இந்தப் பேச்சுத் தமிழுக்குச் சரியான எழுத்துருவம் கொடுத்திருப்பதும் அவரது தனிக் கலை.

அகஸ்தியர் 1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மறையும் வரை, தனது மரணப்படுக்கையிலும் சோர்வடையாமல் இறுதிவரை தனது இலட்சிய வேட்கையை வைரம் பாய்ந்த எழுத்துக்கள் மூலம் மக்கள் மனங்களில் பதித்தார்.

கடும் விமர்சனங்களையும் புன்சிரிப்புடன் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் உள்ளவர். மனித நேயத்தை நேசித்து அதற்காக வாழ்ந்து மறைந்துவிட்ட ஒரு இலக்கியவாதியின் மூச்சு, அவரது எழுத்துக்களைப் போல இன்றும் வாசகர் மனங்களிலே வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# கிழக்கின் குரல்

## கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் திருமந்திர அரண்மனைக்கு அடிக்கல்



(கொக்கட்டிச்சோலை நிருபர்)

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வளாகத்தில் திருமந்திர அரண்மனைக்கான அடிக்கல் நாட்டு விழா ஞாயிற்றுக்கிழமை (04)இடம்பெற்றது.

அடிக்கல்லினை, சிவ பூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்திருந்த அமெரிக்காவின் ஹவாய் தீவின் ஆன்மீக சுடர் ரிஷி தொண்டநாதர் சுவாமி, கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வண்ணக்குமார் மற்றும் குடிகளின் அங்கத்தவர்கள், நிருவாக உறுப்பினர்கள் என பலரும் கலந்து நட்டு வைத்தனர்.

அகில இலங்கை சிவபூமி அறக்கட்டளையின் அனுசரணையுடன் இவ்வரண்மனை அமைக்கப்படவுள்ளது. இங்கு கருங்கல்லில் பொறிக்கப்பட்ட 3000 திருமந்திரப்பாடல்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. 108 சிவலிங்கங்கள் பிரதிஸ்டை செய்யப்படவுள்ளன. மேலும் நடுவில் முகலிங்கம் ஒன்றும் பிரதிஷ்டை பண்ணி அடியவர்களுடைய தரிசனத்திற்காக வைக்கப்பட உள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

குறித்த அரண்மனை வேலைகள் நிறைவு பெற்றதும், எதிர்வரும் ஆண்டு (2023) மாசி மாதம் 18ம் திகதி கும்பாபிசேகம் நடைபெறவுள்ளதாகவும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

மேலும், அடியவர்கள் 3000 திருமந்திர பாடல்களையும் அவர்களது வாயால் ஓதி உணர்ந்து வாழ்வதற்கு உரிய வழிகளையும் அவர்கள் வகுத்து கொள்வதுடன் தங்களது கையாலேயே அங்கு அமைய இருக்கின்ற 108 சிவலிங்கங்களுக்கும் அபிஷேகங்களை செய்ய கூடிய பாக்கியமும் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தனர்.



கல்முனை ஸ்ரீ தரவை சித்தி விநாயகர் ஆலயத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான நாட்காட்டி வெளியீட்டு விழா அண்மையில் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் அதிசயராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நாட்காட்டியை உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைத்தார். கல்முனை மாநகர சபை உறுப்பினரும், ஆலயத்தின் முன்னாள் தலைவருமான சிவலிங்கம், கல்முனையின் மூத்த பிரஜையான எல்லைக்காவலன் ஏகாம்பரம், ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் மற்றும் ஊர் பிரமுகர்கள் ஏராளமானோர் கலந்து சிறப்பித்தனர்.

## மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்திக்குமாறு கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

தம்பலகாமம் குறூப் நிருபர்




வடக்கு கிழக்கு வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாடு, மருத்துவ சாதனங்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு கோரி நேற்று (06) காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இவ் ஆர்ப்பாட்டம் நிலாவெளி இக்பால் நகர் பகுதியில் இடம் பெற்றது.

இவ் ஆர்ப்பாட்டம் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் பெண்கள் அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இவ் ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் அமைப்புக்களின் உறுப்பினர்கள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆண்கள் இளைஞர்கள் உட்பட சுமார் 150க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள். "எமது வாழ்க்கை எமது உரிமை, சுகாதார உரிமைகள் மனித உரிமைகள், பெண்களின் சுகாதார உரிமைகளை உறுதிசெய் முதலான வாசகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதேவேளை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கான மஹஜர் ஒன்றையும் அவர்கள் முன்னளிப்பு செய்தனர். "வடக்கு கிழக்கு பிரதேசங்களில் உள்ள மக்கள் தங்களுக்கு ஏற்படும் சாதாரண நோய் தாக்கம் தொடக்கம் பாரிய சத்திர சிகிச்சை வரையான சிகிச்சைக்காக வைத்தியசாலைகளுக்கு செல்வதே அவர்களது உரிமையாகும். குறிப்பாக மக்கள் வைத்தியசாலைகளுக்கு செல்கின்ற போது குறிப்பிட்ட அளவு அத்தியாவசிய மருந்துப் பொருட்களே வைத்தியசாலைகளில் வழங்கப்படுகின்றது. ஏனைய மருந்துப் பொருட்களை தனியார் வைத்தியசாலைகளிலோ அல்லது தனியார் மருந்தகங்களிலோ பணம் செலுத்தி பெற வேண்டிய சூழ் நிலைகளுக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம்" என அவற்றை நிவர்த்திக்க கோரி கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

### கிழக்குப் பல்கலைக்கழகத்தின்

## வெளிவாரி கற்கைகள் நிலையம் புதிய இடத்தில் அங்குரார்ப்பணம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையத்தின் புதிய இடம் திறந்து வைக்கும் நிகழ்வு(05) மட்டக்களப்பில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருமையில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் புதிதாக மாற்றஞ் செய்யப்பட்டுள்ள வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையத்தின் இடம்பெற்ற புதிய இடம் திறந்து வைக்கும் நிகழ்வானது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தலைமையில் வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி.ரீ.பிரபாகரனின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்துகொண்டு புதிய இடத்தினை உத்தியோக பூர்வமாக திறந்து வைத்துள்ளதுடன், ஒரு டிப்ளோமா கற்கை நெறியும், மூன்று சான்றிதழ் கற்கை நெறிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் திறந்த பல்கலைக் கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் அ. அரியதுரை, உதவி உபவேந்தர் இ. கருணாகரன், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பாரதி கெனடி, கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் ஏ.பகீரதன், நிதியாளர் எம்.எம்.எம்.பாரீஸ், வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி எஸ்.ஜெயராஜ், செனட் சபை உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், கற்கைகளுக்கு பொறுப்பான ஒருங்கிணைப்பாளர்கள் ஏனைய திணைக்களங்களைச் சேர்ந்த உயரதிகாரிகள், மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

குறித்த வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையத்தில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகாத மாணவர்களின் நன்மை கருதி ஒன்பது வகையான கற்கை நெறிகள் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அக்கரைப்பற்றில் புத்தகக் கண்காட்சி



(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

அக்கரைப்பற்று "எய்ம்ஸ்" இன்டர் நேஷனல் பாடசாலை நிறுவனத்தினர் ஒழுங்கு செய்த புத்தககண்காட்சியும் உணவு திருவிழாவும் அண்மையில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

கல்லூரி கற்கைகள் பணிப்பாளர் எம்.எ.தஸ்றீப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக பணிப்பாளர் வீ.ஜெகதீசன் பிரதம அதிதியாகவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதி பணிப்பாளர் எம்.எ.சி. ரியாஸ், வெளிநாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகஸ்தர் எம்.எ.ரஷீத் மற்றும் அமானா வங்கியின் அக்கரைப்பற்று கிளை முகாமையாளர் சஹீர் அஹமத் ஆகியோர் கெளரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

கண்காட்சி, விற்பனையை பார்வையிட்ட இவர்கள், இங்குள்ள முன்னணி பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற வினா, விடைப்போட்டிகளையும் அவதானித்தனர்.

## கிழக்கு இளைஞர் அமைப்பின் விருது வழங்கும் விழா இன்று

கிழக்கு இளைஞர் அமைப்பின் 4 ஆவது ஆண்டு பூர்த்தியும் விருதுகள் வழங்கும் விழாவும் இன்று (07) புதன்கிழமை இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடம் பெறும்.

கிழக்கு இளைஞர் அமைப்பின் தலைவரும் முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருமான தானிஷ் ரஹ்மத்துல்லாஹ் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் டாக்டர் ரமீஸ் அபூபக்கர் பிரதம அதியாகக் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் கெளரவ அதிதிகளாக கிழக்கு இளைஞர் அமைப்பின் சிரேஷ்ட ஆலோசகரும் சர்வதேச மாற்றத்திற்கான பங்காளிகள் நிறுவனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட ஆலோசகருமான றிஷாத் ஷெரீப், கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நஸ்மியா சனூஸ், ஓய்வு பெற்ற அதிபரும், சமூக செயற்பாட்டாளரும் கிழக்கு இளைஞர் அமைப்பின் ஆலோசகருமான எம். பி. அப்துல் ஹமீத், கல்முனை ஆர்டிஎச்எஸ் இன் மருத்துவ அதிகாரி டாக்டர் எம்.என்.எம். தில்ஷான், நாவிதன்வெளி பிரதேசபை உறுப்பினர் எம்.பி. நவாஸ், சட்டத்தரணி எம்.ஏ. முஹம்மட் லாபீர் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் துறை சார்ந்த பலர் அவர்களது சேவையைப் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். இவ் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுநாள் வரை இளைஞர், யுவதிகளின் நன்மை கருதி பல்வேறு வகையான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் ஓர் அமைப்பு இதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எம்.எஸ்.எம். ஸாகிர்)

### ரூ.2 இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்டு

## கவனிப்பாரற்ற நிலையில் பேராறு சிறுவர் பூங்கா

கந்தளாய் தினகரன் நிருபர்



ஒரு கோடியே 95 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட பேராறு சிறுவர் பூங்கா தற்போது கவனிப்பாரற்ற நிலையில் உள்ளது.

பராமரிப்பின்றி காணப்படும் இச் சிறுவர் பூங்காவில் பெறுமதியான கொங்கிரீட் இருக்கைகள் மற்றும் கொங்கிரீட் தூண்களும் உடைக்கப்பட்டுள்ளதோடு அங்குள்ள ஊஞ்சல்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. மின் இணைப்பு இல்லாத காரணத்தினால் அங்குள்ள பாதுகாப்பு வேலிகள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளதோடு, 13 எல்.ஈ.டி மின் விளக்குகளும் திருடப்பட்டுள்ளன.

பிரதேச சபையால் ஒரு கோடியே 95 இலட்சம் ரூபா செலவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட இச்சிறுவர் பூங்காவிற்கு ஒரு பாதுகாவலரை நியமிக்க முடியாதுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர். பராமரிப்பு இல்லாத காரணத்தினால் இப்பூங்கா, காடு வளர்ந்து, குப்பை மேடாகவும் போதை பாவனையாளர்களின் விடுதியாகவும் மாறி வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பிரதேச சபை நிர்வாகம் இதுதொடர்பில் கவனம் செலுத்தி, பேராறு சிறுவர் பூங்காவை புனர்நிர்மாணம் செய்து முறையாக பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## சவளக்கடை வீரத்திடல் அல்–ஹிதாயாவில் குடிநீர்த்தொகுதி அங்குரார்ப்பணம்



கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் மூலம் அம்பாறை மாவட்டத்தின் பல ஊர்களுக்கு பலதரப்பட்ட மனிதநேயப்பணிகளைத் தொடர்ச்சியாக செய்துவருகின்றது.

அந்த வகையில் சவளக்கடை கமு/சது/ வீரத்திடல் அல்ஹிதாயா முஸ்லிம் வித்தியாலயத்திற்கு குடிநீர் மற்றும் வுழு செய்வதற்கான நீர்த்தொகுதி அமைப்பை அமைத்துத் தருமாறு கல்லூரியின் அதிபர் திருமதி. ஏ.எம். முனாஸிர் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினர்கள் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் எம்.பி. நவாஸ் ஊடாக ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பிடம் கோரிக்கை ஒன்றினை முன்வைத்திருந்தனர். அக்கோரிக்கையினை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும், கல்முனை மாநகர பிரதிமுதல்வரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளருமான ரஹ்மத் மன்சூர் ஏற்றுக் கொண்டு மிகவும் குறுகிய நாட்களுக்குள் குறித்த நீர்தொகுதி அமைப்பை அமைத்து உத்தியோகபூர்வமாக திறந்து பாடசாலை நிர்வாகிகளிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் எம்.பி. நவாஸ் மற்றும் பவுண்டேஷன் உறுப்பினர்களும், பாடசாலை ஆசிரியர்கள், நிர்வாகிகள், மாணவர்கள், புத்திஜீவிகள், நலன்விரும்பிகள் என மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

### இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான

## இடமாற்றக் கட்டளைகளை நடைமுறைப்படுத்த ஏற்பாடு

(ஒலுவில் விசேட நிருபர்)

கிழக்கு மாகாண இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய வருடாந்த இடமாற்றக் கட்டளைகளை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக, கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) ஏ. மன்சூர் தெரிவித்தார்.

நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கிழக்கு மாகாண இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான 2020, 2021 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த இடமாற்றக் கட்டளை இதுவரையிலும் நடைமுறைப்படுத்தப்படாமலிருப்பதாக அவர் தெரிவித்தார். இடமாற்றக் கட்டளைகள் கிடைக்கப்பெற்ற உத்தியோகத்தர்களின் கடமைப் பொறுப்புக்களை அலுவலகத்தின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் பயிற்றுவிப்பதுடன், அவர்களுக்கான பதிலீட்டு உத்தியோகத்தர்கள் வரும்வரை காத்திராமல் உரிய காலத்தில் உத்தியோகத்தர்களை விடுவிக்குமாறும் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டுவருகின்றது.

இதுவரையில் இடமாற்றக் கட்டளைகள் இரத்துச் செய்யப்படாத, கால நீடிப்பு வழங்கப்படாத உத்தியோகத்தர்கள் அனைவரையும் உடன் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், 31.12.2022 ஆம் திகதி வரையில் காலநீடிப்பு வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களை இடமாற்றக் கட்டளையின் பிரகாரம் 02.01.2023ஆம் திகதி முதல் புதிய சேவை நிலையங்களுக்கு விடுவிப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார்.

விடுவிப்புப் பெற்று புதிய சேவை நிலையங்களில் கடமையைப் பொறுப்பேற்காத உத்தியோகத்தர்களின் பெயர் விபரங்கள் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்படுவதுடன், அடுத்துவரும் மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவினை இடைநிறுத்துவதற்கு அனுமதி பெறப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவித்துள்ளார்.

# உரிய போக்குவரத்து வசதிகள் இன்மையால் பாடசாலை மாணவர்கள் அசௌகரியம்

## சுமார் 18 கி.மீற்றர் தூரம் நடந்தே சென்றுவரும் அவலம்

(பரந்தன் குறூப் நிருபர்)

முல்லைத்தீவு அம்பாள்புரம் ஆறாம்கட்டை ஆகிய பகுதிகளுக்கு உரிய போக்குவரத்து வசதிகள் இன்மையால் மாணவர்கள் பல கிலோமீற்றர் தூரம் நடந்துசெல்லும் அவலநிலை காணப்படுவதாக தெரிவிக்கின்றனர். இக்கிராமங்களைச் சேர்ந்த 60 ற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் என பலரும் பல கிலோமீற்றர் தூரம் நடந்துசெல்கின்றனர். எனினும் பலவருடங்களாக எந்த வித தீர்வும் கிடைக்கவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மிகவும் பின்தங்கிய பகுதிகளில் ஒன்றாக அம்பாள்புரம், ஆறாம்கட்டை, கொல்லவிளாங்குளம் ஆகிய பகுதிகள் காணப்படுகின்றன. இப்பகுதிகளுக்கான பிரதான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமை, போக்குவரத்து வசதியின்மை போன்ற காரணங்களினால் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் எனப்பலரும் தொடர்ந்து பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் தரம் 5 ற்கும் மேற்பட்ட வகுப்புக்களில் கல்வி கற்கும் சுமார் 60 ற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒன்பது கிலோமீற்றர் தொலைவிலுள்ள வன்னிவிளாங்குளம் மற்றும் 15 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மாங்குளம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தமது பாடசாலை கல்வியை தொடர்கின்றனர்.



எனவே பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மையாமல் மாணவர்கள் கிராமங்களிலிருந்து தொலைவிலுள்ள பாடசாலைகளுக்கு நடந்து சென்றே வீடுகளுக்கு திரும்பி வருகின்றனர்.

போக்குவரத்து பிரச்சினை தொடர்பாக கடந்த 12 வருடங்களாக அரசியல்வாதிகள், அதிகாரிகள் மட்டத்தில் பிரதேச மக்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதும், இதுவரை எந்தவித தீர்வும் கிடைக்கவில்லையென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே தமக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





இலங்கை ஸ்ரீ சத்யசாய் சர்வதேச நிறுவனத்தினால் வவுனியா இராஜேந்திர குளம் கிராமத்திலுள்ள பார்வையை இழந்த தம்பதியினருக்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் வீடு ஒன்றை அமைத்து அண்மையில் கையளித்துள்ளனர். வவுனியா பிரதேச செயலாளரின் வேண்டுகோளுக்கமைவாக பார்வையை இழந்த சஞ்சீவன் குடும்பத்திற்கு இவ்வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. வீடு கையளிப்பு நிகழ்வில் இலங்கை ஸ்ரீ சத்ய சாய் சர்வதேச நிறுவனத்தின் தலைவர் திரு.மனோகரன், வவுனியா மாவட்டச் செயலர், வவுனியா பிரதேச செயலாளர், வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் வவுனியா பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் உள்ளிட்டோர் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படம்: சாவகச்சேரி விஷேட நிருபர்)

# வவுனியா நகரசபையால் இருவேறு கட்டடத் தொகுதிகள் திறந்து வைப்பு

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா நகரசபையால் இருவேறு கட்டடத் தொகுதிகள் நேற்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.



உள்ளூர் மேம்பாட்டு ஆதரவு திட்டத்தின் கீழ் பூங்காவினுள் பொது நிகழ்வுகளுக்கான கட்டமைப்புக்களுடன் கூடிய திறந்த மேடை மற்றும் வவுனியா நகரில் இறைச்சிக்கடைக்கான 06 கடைகள் உள்ளடக்கிய கட்டடத் தொகுதி போன்றன வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமனினால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வவுனியா வர்த்தக சங்கத்தலைவர் சுஜன், மற்றும் நகர சபை உறுப்பினர்கள், நகரசபை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இரு கட்டடத் தொகுதிகளும் 16 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண பல்கலை மாணவிகளிடம் பாலியல் சேட்டைகளில் ஈடுபடும் கும்பல்

## சிவில் உடையில் பொலிஸார் கண்காணிப்பு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவிகளுடன் வீதிகளில் பாலியல் ரீதியான சேட்டைகளில் ஈடுபடும் கும்பல்களுக்கு எதிராக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

விடுதிகள் மற்றும் வாடகை அறைகளில் தங்கியுள்ள மாணவிகள், பல்கலைக்கழகத்தில் தமது கற்றல் செயற்பாடுகளை முடித்துக்கொண்டு தமது தங்குமிடத்திற்கு திரும்பும் போது பல்கலையை சூழவுள்ள வீதிகளில் அநாவசியமாக கூடி நிற்கும் கும்பல்கள் மாணவிகளை இலக்கு வைத்து பாலியல் சேட்டைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாணவிகளை நோக்கி ஆபாச வார்த்தைகளால் பேசுதல், தமது அந்தரங்க உறுப்புக்களை காட்டுவது, ஆபாசமாக சைகைகளை காட்டுவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுதொடர்பில் அண்மையில் பாதிக்கப்பட்ட மாணவிகள் 300 பேர் கையொப்பம் இட்டு, பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு முறையிட்டிருந்தனர்.

பல்கலைக்கழகத்திற்கு வெளியே இவ்வாறான செயற்பாடுகள் நடப்பதனால் , மாணவிகளால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் பல்கலைக்கழக சூழலில் சிவில் உடைகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

# வேலணை பிரதேச சபை பட்ஜட் நிறைவேற்றம்

பருத்தித்துறை விசேட நிருபர்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அதிகாரத்துக்குட்பட்ட வேலணை பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் எட்டு மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. வேலணை பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டத்திற்கான விசேட கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை (06) சபையின் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

பலத்த விவாதத்திற்கு பின்னர் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தியால் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது இலங்கை தமிழரசுக்கட்சியின் எட்டு உறுப்பினர்களும் வாக்கெடுப்பை புறக்கணிப்பதாக தெரிவித்து வெளிநடப்பு செய்தனர்.

வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 9 உறுப்பினர்களும், எதிராக ஒரு உறுப்பினரும் ஒரு உறுப்பினர் நடுநிலமையையும் வகித்திருந்தார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 6 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 2 உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரு உறுப்பினர் என 9 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

# மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மாநாடு





பருத்தித்துறை விசேட நிருபர்

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஐந்தாவது மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மாநாடு நேற்றுமுன்தினம் மருத்துவ பீட கூவர் அரங்கில் இடம்பெற்றது.

"ஆராய்ச்சியினூடான ஞானம் Wisdom through Research" என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற இந்த மருத்துவ மாணவர் ஆராய்ச்சி மாநாட்டில் பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் பிரயோக சுகாதார ஆராய்ச்சி நிறுவனத்தைச் (Institute of Applied Health Research , University of Birmingham) சேர்ந்த சுகாதார தரவு அறிவியல் மற்றும் பொது சுகாதாரப் (Professor in Health Data Science and Public Health) பேராசிரியர் கிருஸ்ணராஜா நிரந்தரகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு முதன்மை உரையாற்றினார்.

இந்நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் இ.சுரேந்திரகுமாரன், மருத்துவ பீடத்தைச்சேர்ந்த பேராசிரியர்கள், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், மருத்துவ பீட விரிவுரையாளர்கள் மற்றும் மருத்துவ பீடத்தின் 40ஆம், 41ஆம் மற்றும் 42 ஆம் அணிகளைச் சேர்ந்த மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

40 ஆம் அணி மருத்துவ மாணவர்களால் சுமார் 30 ஆராய்ச்சிச் சுருக்கங்கள் இந்த ஆய்வு மாநாட்டில் முன் வைக்கப்பட்டன. "நாள்பட்ட நோய்களும், பராமரிப்பும்", "பெண்கள் குழந்தைகளுக்கான ஊட்டச் சத்தும், அறிவூட்டலும்", "பெருந்தொற்றுப் பரவல் அபாயம்" ஆகிய மூன்று தலைப்புகளில் ஆராய்ச்சி அமர்வுகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைச் சேர்நத நிபுணர்கள் அடங்கிய மதிப்பீட்டுக் குழுவினால் வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட ஆராய்சிச் சுருக்கங்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

# அத்தியாவசிய மருந்துகள் கிடைக்க வழிசெய்யுமாறு ஜனாதிபதியிடம் வடக்கு மக்கள் கோரிக்கை

மன்னார் குறூப், தலைமன்னார் விஷேட , பரந்தன் குறூப், வவுனியா விசேட நிருபர்கள்

அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவசாதனங்கள் உடனடியாக மக்களுக்கு கிடைக்க ஜனாதிபதி வழி செய்ய வேண்டும் என வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டமொன்று நேற்று செவ்வாய்க்கிழமை வடக்கில் முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் போராட்டங்கள் இடம்பெற்றன.

வடக்கில் கிழக்கு பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் கிராமிய மீனவப் பெண்கள், மாதர்ஒன்றியங்கள், பெண்கள் வலையமைப்பினர், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சிவில் அமைப்புக்கள் போன்ற அமைப்புகளிலிருந்து சுமார் 500ற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். கொவிட் 19 மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு மக்கள் முகம்கொடுத்து வரும் நிலையில் மருந்து வகைகளும் மருத்துவ சாதனங்களும் முழுமையாக கிடைக்கப் பெறாமையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்துவருகின்றனர்.



சாதாரண நோய் மற்றும் சத்திர சிகிச்சைகள் போன்றவற்றுக்கான மருந்துப்பொருட்களும் மருத்துவ சாதனங்களும் கூட தட்டுப்பாடாகவுள்ளது. நாய், பூனை மற்றும் பாம்பு தீண்டல்களுக்கு மருந்துகள் கிடைக்கப் பெறுவது கடினமாகவுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

# யாழ்.கிணற்று நீரை குடிப்பதற்கு பயன்படுத்தலாமா? என்பது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ளவும்

## கலாநிதி ஆறுதிருமுருகன் கோரிக்கை

யாழ்.விசேட நிருபர்

யாழ்.குடாநாட்டின் கிணற்று நீரை குடிப்பதற்கு பயன்படுத்தலாமா? என்பது தொடர்பில் பல்கலைக்கழக துறை சார்ந்த அதிகாரிகள், அரசியல் பிரதிநிதிகள் ஆய்வு ரீதியாக பரிசோதனைகள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்தி மக்களுக்கு அறிவிக்கவேண்டும் என கலாநிதி ஆறுதிருமுருகன் கேரிக்கை விடுத்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.குடாநாட்டில் மட்டுமின்றி வடபகுதி எங்கும் தண்ணீர் போத்தல்களின் ஆதிக்கம் வலுப்பெற்று மக்களின் பணம் வீண்விரயமாகின்றது.

அதுமட்டுமன்றி போத்தல் தண்ணீருக்கான மக்களின் பணம் தென்னிலங்கைக்கு செல்கிறது. ஏழை வீடொன்றில் மரண சடங்கொன்று நிகழ்ந்தால் தண்ணீர் போத்தல்களால் அதிகளவில் பணம் மேலதிகமாக செலவாகின்றது.

கடந்த சில காலத்திற்கு முன்பாக கிணற்று நீரில் எண்ணெய் கலந்துவிட்டது, நீர் மாசடைந்து விட்டது மற்றும் ஊற்றுக்கள் பயனற்றுபோய்விட்டது என பல்வேறு போராட்டங்கள், கலந்துரையடல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று தற்போது இவை அமைதியாகி விட்டது.

இதனை பயன்படுத்தி அன்று ஆரம்பித்த தண்ணீர் போத்தல் வியாபாரம் இன்று மரணசடங்குகள், வீட்டுவிழாக்கள், கலை நிகழ்வுகள் மற்றும் மண்டப விழாக்கள் என அனைத்து இடங்களிலும் கொடிகட்டி பறக்கின்றது. போத்தல் தண்ணீரை பயன்படுத்தலாமா? எங்கு எப்படி தயாராகின்றது என்பது தொடர்பில் வெளிப்படுத்தல்கள் இருக்கின்றனவா? ஆரம்ப காலங்களில் ஆலயங்களிலுள்ள கிணறுகளின் தண்ணீரை மக்கள் விரும்பி குடிப்பார்கள். அதனை தீர்த்தம் என்றே குடிப்பார்கள். வீடுகளிலும் அவ்வாறே கிணற்றுநீரை பயன்படுத்தினார்கள்.

யாழ்ப்பாணத்து கிணற்று தண்ணீர் என்றாலே விரும்பி குடித்த காலம் மாறிவிட்டது. இன்று கிணற்றில் தண்ணீர் அள்ளினாலே பிரச்சினை என்கிறார்கள். அந்தளவிற்கு போத்தல் தண்ணீரின் பயன்பாடு அதிகரித்து பணம் வீண்விரயமாகி வருகிறது.

எனவே யாழ்ப்பாணத்து கிணற்று நீரை பயன்படுத்தலாமா? இல்லையா? என்பது பற்றி யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞானத் துறையை சார்ந்தவர்கள், விவசாயத் துறைசார்ந்தவர்கள், பொருளியல் துறைசார்ந்தவர்கள், அரசியல் பிரதிநிதிகள் ஒன்று கூடி குடாநாட்டின் மக்கள் கிணற்று நீரை பயன்படுத்தலாமா என்பது பற்றி ஆய்வுகள் மேற்கொண்டுபொதுமக்களுக்குசாதகபாதகங்களை அறிவிக்க வேண்டும்.

உண்மையாகவே மக்களின் பணத்தில் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் என்ற உணர்வு இருந்தால் தண்ணீருக்காக குரல் கொடுக்கவேண்டும்.

# மட்டக்களப்பு மாநகரசபை ஏற்பாட்டில் மார்கழி பௌர்ணமிக் கலை விழா இன்று



கலைகளை வளர்க்கும் நோக்குடன் கலைஞர்களை ஊக்குவித்து அவர்களின் ஆற்றுகைகளை அரங்கேற்ற களம் அமைத்துக் கொடுக்கும் நிகழ்வாக மட்டக்களப்பு மாநகரசபையினால் நடத்தப்படும் மாதாந்த பௌர்ணமி கலைநிகழ்வுகள் அமைந்துள்ளன.

கலைகள் மூலம் இனங்களிடையே சக வாழ்வு, சௌஜன்யம், சமாதானம் மற்றும் நல்லிணக்கம் ஏற்படுகின்றன. இனங்களின் வாழ்வியல் பண்பாடுகளுக்கு பரஸ்பரம் மதிப்பளிப்பது நிலையான அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் பண்டைய காலந்தொட்டு மீன்பாடும் தேனாட்டில் கலைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது. தமிழையும் மற்றும் கலைகலாசார பாரம்பரிய விழுமங்களையும் அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லும் நிகழ்வாக பௌர்ணமி கலைநிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

அக்காலம் தொடக்கம் கலை கலாசார மன்றங்களினாலும், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களினாலும் குறித்த நிகழ்வுகள் நடைபெற்று வந்த நிலையில், தற்போது மட்டக்களப்பு மாநகரசபையின் கலைகலாசாரக் குழுவினால் இந்நிகழ்வு நடத்தப்பட்டு வருகின்றது.

2018 இல் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நடைபெற்றபோது மட்டக்களப்பு மாநகர சபைக்கு தெரிவு செய்யப்பட்ட 38 உறுப்பினர்களைக் கொண்டு 2018 சித்திரை பத்தாம் திகதி முதல் புதிய முதல்வராக தெரிவு செய்யப்பட்ட தியாகராஜா சரவணபவன் தலைமையில் சபை நிகழ்வுகள் ஆரம்பமாகின. கலை கலாசார நிலையியற் குழுவை நிறுவி அப்போதைய ஆரம்பத் தலைவராக செயற்பட்டு வந்த மாநகரசபை உறுப்பினர் வேலுப்பிள்ளை தவராஜா 11.12.2021 இல் மறைந்தார்.

மக்கள் விடுமுறை நாட்களைக் கழிப்பதற்காக மட்டக்களப்பு நகரின் இதயமெனக் கருதப்படும் காந்தி பூங்காவிற்கு வருகின்றனர். அங்கே அரங்கமைத்து இயல் இசை நாடகக் கலை கலாசார நிகழ்வுகள் நடைபெற்று வந்தமை மக்கள் மத்தியில் மிகுந்த பாராட்டைப் பெற்று வந்திருந்தது.

கடந்த 2019_2021 காலப்பகுதியில் கொவிட்19 தொற்று மற்றும் உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த பௌர்ணமிக் கலைநிகழ்வுகள் மீண்டும் கலை கலாசாரக் குழுவின் புதிய தலைவரான மா.சண்முகலிங்கத்தின் வழிகாட்டலில் நடைபெற்று வருகின்றன.

கலையானது இனம், மதம், மொழி மற்றும் அரசியல் பேதமற்றது என்பதற்கிணங்க மட்டக்களப்பு மாநகரசபையில் அங்கம் வகிக்கும் எல்லாக் கட்சி சார்பான உறுப்பினர்களையும் இணைத்து பல்லின கலைஞர்களின் ஆற்றுகைகளை வெளிப்படுத்தும் களமாக காந்திப் பூங்கா அமைந்துள்ளது.

மாதங்களில் சிறந்தது மார்கழி மாதம். இம்மாதத்தில் கலைகளை வாழ வைக்கும் நோக்கில் கலைஞர்களை ஊக்குவித்து அவர்களின் ஆற்றுகைகளை அரங்கேற்றி உற்சாகப்படுத்தும் நிகழ்வாக மட்டக்களப்பு மாநகரசபை நடாத்தும் மார்கழி மாத பௌர்ணமிக் கலை நிகழ்வு இன்று 07.12.2022 புதன்கிழமை நடைபெறுகிறது.

மாநகரசபை கீதத்துடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் வரவேற்புரையை மாநகரசபை உறுப்பினர் சசிகலா விஜயதேவாவும், தமிழ் மொழிவாழ்த்தை யாழ் பல்கலைக்கழக சங்கீத மாணவி பிருந்தாவனி தர்மநாதனும் வழங்குவர்.

கலாசாதனாலய கலைக்கழகத்தின் வரவேற்பு நடனம், நாட்டிய நடனம் (ஜெ.கிருத்திகா), பாடல் (வானொலி தொலைக் காட்சி இசைக் கலைஞரும் மட்டக்களப்பு மத்திய கல்லூரி சங்கீத ஆசிரியருமான சாந்தினி தர்மநாதன்), பரதநாட்டியம் (பாலமீன்மடு நர்தன பவனம் நாட்டியாலயம்), கவிதை (மட்டுநகர் மனங்களை ஒட்டும் நகர் – முன்னாள் காத்தான்குடி நகரசபை உறுப்பினர் கவிக்கோன் இல்மி அகமட்லெப்பை), நாடகம் (கலை இலக்கிய கழகம் காத்தான்குடி) ஆகியனவும் நடைபெறவுள்ளன.

நன்றியுரையை மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் கௌரி தயாளகுமார் வழங்குவார். நிகழ்ச்சிகளை ஜீ.எழில்வண்ணன் நெறிப்படுத்தவுள்ளார்.

இந்நிகழ்வில் அதிதிகளாக மாநகர ஆணையாளர் நா.மதிவண்ணன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், பிரதி ஆணையாளர் உ.சிவராஜா மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் கலந்து கொள்வர்.

(சிவம் பாக்கியநாதன்
(மட்டக்களப்பு விஷேட நிருபர்)

# பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் கைது

(றொட்டவெவ குறூப் நிருபர் )

ஹொரவபொத்தானை பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் இலஞ்ச ஊழல் விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹொரவபொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை பிரிவில் செய்த முறைபாட்டின் பிரகாரம் நேற்று (06) அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

குறித்த வர்த்தகரின் மனைவிக்கு சொந்தமான கட்டிடம் ஒன்றின் சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பு அனுமதி பத்திரத்தை வழங்குவதற்கு தொழில்நுட்ப அதிகாரி இருபதாயிரம் ரூபாய் இலஞ்சம் கேட்டதாகவும் அதனையடுத்து அந்த பணத்தை பெற்றுக் கொள்ள சென்ற போதே அவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இலஞ்ச ஊழல் விசாரணை பிரிவின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.


சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

மலேரியா தடுப்பு இயக்கம்

## 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் வருடத்தின் பொருட்டு பின்வரும் அம்சங்களுக்காக பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிக்கும் முகவர்கள், உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நியதிகள் சட்ட சபைகள் உட்பட அரச நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வழங்கல்கள்**

1. அனைத்து வகையான காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள்
2. மரத் தளபாடங்கள் வீட்டுஉபயோகப் பொருட்கள் (மரம், நாரிழை, உருக்கு, பிளாஸ்டிக்)
3. பெயர்ப் பலகைகள், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள்
4. கணனிகள், கணனி உபகரணங்கள் மற்றும் டோனர், கார்ட்ரிச்
5. புகைப்படப் பிரதி இயந்திரங்கள், அச்சுப் பொறிகளுக்குத் தேவையான துணைப்பாகங்கள்
6. அனைத்து வகையான காபோலிக் சவர்க்காரம், சுத்திகரிப்புத் திரவங்கள் மற்றும் தூள்கள்
7. கட்டிடப் பொருட்கள் (குழாய்கள், நிறப்பூச்சுகள், பொலிஷ், தினர், வார்னிஸ்)
8. அனைத்து வகையான வாகன பற்றறிகள்
9. அனைத்து வகையான வாகனங்களுக்கான டயர்கள், டியூப்கள் மற்றும் டியூப் கொலர்கள்
10. இலத்திரனியல் மற்றும் மின் உபகரணங்கள் (குளிர்சாதனப் பெட்டி, மின் விசிறிகள், கேத்தல் மற்றும் கொதிகலன்கள்)
11. ஊழியர்களுக்கான அடையாள அட்டை தயாரித்தல்
12. மின்சாரம் மற்றும் இயந்திர வேலைகளுக்கான உபகரணங்கள் மற்றும் பகுதிகள் (வளிச் சீராக்கம்)
13. இரசாயனப் பொருட்கள்
14. ஆய்வுகூட உபகரணங்கள்
15. வளிச் சீராக்கிகள்
16. துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகளை அச்சிடல்

**சேவைகள்**

1. அனைத்து வகையான மின்சார உபகரணங்கள் குளிரூட்டிகளை பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
2. வாகனங்களைச் சேர்விஸ் செய்தல் - வாகன திருத்தவேலைகளைச் செய்தல்
3. அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள், பராமரிப்பு மற்றும் சேர்விஸ் (தொலைநகல் இயந்திரங்கள், கணனி இயந்திரங்கள்)
4. நீர்க் குழாய் முறைமைகள், கழிவுநீர்க் குழாய் திருத்தவேலைகள் மற்றும் சிறு கட்டிடப் பராமரிப்பு
5. உற்சவ வேலைகள் மற்றும் பயிற்சி அமர்வுகளுக்கான தங்குமிட வசதிகள், உணவு பானங்களை வழங்குதல், உற்சவ மண்டப வசதிகளை வழங்குதல்
6. வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்

### வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம் - 2023

1. வியாபாரத்தின் பெயர் மற்றும் முகவரி:
2. பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் வழங்கல் மற்றும் சேவை:
3. விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி:
4. வியாபாரப் பதிவின் இலக்கம் மற்றும் திகதி:
5. தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம்:
6. இந்த நிறுவனத்திற்கு கடன் வசதியின் கீழ் பொருட்களை வழங்குவதற்கான நிபந்தனைகள்:
7. பதிவு செய்து கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் பற்றுச்சீட்டின் இலக்கம்: (பற்றுச்சீட்டை இணைக்கவும்)
8. போக்குவரத்து வசதிகள் தொடர்பான விபரங்கள்:
9. வெட் பதிவிலக்கம்:

என்னால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும் உண்மையானவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன். இவ்விபரங்கள் பொய்யென உறுதிப்படுத்தப்பட்டால் எனது பதிவு நிராகரிக்கப்பட்டு இரத்துச் செய்யப்படும் என்பதை நான் அறிவேன்.

........................ ..........................................

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

**அறிவுரைகள் மற்றும் நிபந்தனைகள்**

1. பதிவானது 2023ஆம் வருடத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும்.
2. ஒன்றுக்கு மேற்பட்ட அம்சங்களுக்காக வழங்குநர்கள் பதிவு செய்து கொள்ளலாம்.
3. வழங்கல் சேவைகளுக்கு அமைய வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஒவ்வொரு அம்சங்களுக்காகவும் மீளளிக்கப்படாத 400.00 ரூபாவை பதிவுக் கட்டணமாக 2022-12-08ஆம் திகதி முதல் 2022.12.28ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப 3.00 மணி வரை இந்த அலுவலகத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. மேற்குறிப்பிடப்பட்ட மாதிரிக்கமைய தம்மால் சுயமாகத் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்களை வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியுடன் பதிவுத் தபாலில் பணிப்பாளர், மலேரியா தடுப்பு இயக்கம், 5வது மாடி, இல. 555/5, எல்விட்டிகல மாவத்தை, நாராஹென்பிட்டி, கொழும்பு-05 எனும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது இந்நிறுவனத்தின் கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ 2022-12-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும்.
6. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
7. வழங்குநர்கள் குறைந்தபட்சம் ஒரு மாத காலத்துக்கான கடன் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
8. உரிய தரம் மற்றும் மாதிரிக்கமைவாக பொருட்களை மற்றும் சேவைகளை தேவையான அளவில் உரிய தினத்தில் வழங்குதல் வேண்டும்.
9. அனைத்து வழங்கல்களையும் நிறுவனத்திற்கு கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும்.
10. அனைத்து வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்கு பதிவேட்டிலிருந்து விலைகளைக் கோருவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டாலும் பதிவு செய்யப்படாத ஏனைய அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோரும் உரிமையை நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது. எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை மலேரியா தடுப்பு இயக்கத்தின் பிராந்திய பெறுகைக்கு குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
11. தேவையான தரம் மற்றும் நியதிகளுக்கு அமைவாக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்காத வழங்குநர்களின் பதிவை பதிவேட்டிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு மலேரியா தடுப்பு இயக்கத்தின் நிதிப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. 011-2368469

**தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
மலேரியா தடுப்பு இயக்கம்.**


# அக்கரைப்பற்றில் கால்நடை வளர்ப்பு திட்டத்தில் ஆடுகள் வழங்கிவைப்பு



(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தினால் பின்னடைவான கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான கிராமிய வீட்டு ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு முதற்கட்டமாக கால்நடை வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம். முஹம்மட் அன்சார் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன் போது ஆலிம்நகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 05 பயனாளிகளுக்கு ஆடுகளை பிரதேச செயலாளர் ரீ.எம். முஹம்மட் அன்சார், மிருக வைத்திய அதிகாரி றிப்கான் ஆகியோர் வழங்கிவைத்தார்கள். இந் நிகழ்வில் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் பி. சஹர்பான், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.எல். தையூப் மற்றும் பயளாளிகளும் கலந்து கொண்டனர்.

# வறுமைக் கோட்டின் கீழ் வாழும் கடற்றொழிலாளர்களுக்கு தோணிகள்



(கிண்ணியா தினகரன் நிருபர்)

கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு, இலவசமாக தோணிகள் வழங்கப்பட்டுள்ளன.அல் ஹித்மதுல் உம்மா பௌண்டேசன் நேற்று (06) செவ்வாய்க்கிழமை இவற்றை வழங்கியது.

இந்நிகழ்வு அல்ஹித்மதுல் உம்மா பௌண்டேசனின் தலைவர் கஸ்ஸாலி முஹமட் பாத்திஹின் தலைமையில் நடைபெற்றது.

# சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயற்சி:

19 பேருக்கு விளக்கமறியல்

தோப்பூர் குறூப் நிருபர்

சம்பூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சம்பூர் கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்ல தயாராக இருந்த போது ஞாயிற்றுக்கிழமை இரவு சம்பூர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட பத்தொன்பது பேரை நேற்று முன்தினம் (5) மூதூர் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது அவர்களை நாளை வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். கைது செய்யப்பட்டவர்களுள் மூன்று பெண்களும் ஐந்து சிறுவர்களும் அடங்குகின்றனர்.

# தோப்பூர் பிரதேசத்தில் திடீர் பரிசோதனை

தோப்பூர் குறூப் நிருபர்

மூதூர் சுகாதார வைத்தியதிகாரி பிரிவிற்குட்பட்ட தோப்பூர் பொது சுகாதார பரிசோதகர் பகுதியில் நேற்று முன்தினம் (05) உணவகங்கள், பலசரக்கு நிலையங்கள் மற்றும் வெதுப்பகங்கள் என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. மூதூர் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் இப்பரிசோதனை செய்யப்பட்டதோடு உணவு பாதுகாப்பு தொடர்பாக ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. இதன்போது மனித பாவனைக்கு பொருத்தமற்றதும் காலாவதியானதுமான உணவுப் பொருட்கள் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கு ஆபத்தான பாத்திரங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டன.


## கேள்விக்கான அழைப்பு

### கெஸ்பேவ நகர சபை

### கணனி இயந்திரம் லெப்டொப் கணனி மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல்

01. கெஸ்பேவ நகர சபையின் தலைவரால் கீழ்க்காணும் குறைந்தபட்ச தகைமையுடன் தகுதியும் தகைமையும் உள்ள கேள்விதாரர்களிடம் இருந்து கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் கணனி மற்றும் துணைப்பாகங்களின் பெறுகைக்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. முழுமையான விபரங்கள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| தொடர் இல | கேள்வியின் பெயர் | அளவு |
|---|---|---|
| 01 | முழுமையான டெஸ்க்டொப் கணனி | 12 |
| 02 | A4 லேசர் அச்சு இயந்திரம் | 03 |
| 03 | கணனி பற்றரி (UPS) | 30 |
| 04 | லெப்டொப் கணனி | 01 |
| 05 | லேசர் பிரிண்டர் (mono) | 02 |

02. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையூடாக கேள்விகள் செயற்படுத்தப்படும்.
03. கேள்விப் பெறுகைக்காக தகைமை பெறுவதற்கு வெற்றிகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் இலங்கையில் மேற்படி துணைப்பாகங்களை வழங்குதல் சம்பந்தமாக ஐந்து வருட (05) அனுபவம் இருத்தல் வேண்டும்.
04. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு தேவையான மேலதிக விபரங்களை, கெஸ்பேவ நகர சபையின் தொலைபேசி இலக்கம் 0112618197 இல் பெற்றுக்கொள்ள முடிவதுடன், அம்முகவரியிலேயே, அலுவலக நாட்களில், கேள்விகோரல் காலத்திற்குள் மு.ப. 9.00 அல்லது பி.ப. 4.00 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள், கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
05. மீளளிக்கப்படாத ரூ. 2000.00 கட்டணத்தை காசாக செலுத்தி மற்றும் கெஸ்பேவ நகர சபையின் தலைவருக்கு எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து 2022.12.05 முதல் 2022.12.19 மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள் (அலுவலக நேரங்களில்) ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு தயாரிக்கப்பட்ட முழுமையான கேள்வித் தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம்.
06. கேள்விகள் கீழுள்ள முகவரியில், தலைவருக்கு 2022.12.20 பி.ப. 3.00 இற்கு முன்பு கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும். குறித்த ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்தவுடன் வருகை தருவதற்கு ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
07 மதிப்பிடப்பட்ட பெறுகைப் பெறுமதியில் 2% தொகை பெறுமதியுடைய கேள்விப் பிணைச் சான்றிதழை கேள்விதாரர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
08. எந்த அல்லது சகல கேள்விகளையும் நிராகரித்தல் அல்லது எந்தக்காரனமும் கூறாமலேயே முழு கேள்வி செயற்பாட்டையும் இரத்துச் செய்யும் அல்லது எந்தக் கேள்வியையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.

**லக்ஷ்மன் பெரேரா,
தலைவர்,
கெஸ்பேவ நகர சபை**

## சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை (இசுஅஅ - SLTDA)**

# விலைமனு சமர்ப்பித்தலின் நீடிப்பு

## இசுஅஅ இற்கு இணைய அனுசரணை வழங்கல்

**CONTRACT No.: SLTDA/ICT/NC/NCB/Web Sup/2022/07R**

மேலேயுள்ள விடயம் தொடர்பாக 2022 நவம்பர் 17 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரம் தொடர்பானது.

விலைமனுக்களின் சமர்ப்பித்தலின் இறுதித் தினமானது பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| விலைமனுவை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | : 2022 டிசம்பர் 23 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு. |
| விலைமனு முன்னோடிக் கூட்டம் | : 2022 டிசம்பர் 16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு **(on line Zoom)** |
| விலைமனு செல்லுபடியாகும் காலம் | : 119 நாட்கள் (2023 ஏப்ரல் 21 ஆம் திகதி அடங்கலானது) |
| விலைமனுப்பிணை செல்லுபடியாகும் காலம் | : 147 நாட்கள் (2023 மே 19ஆம் திகதி அடங்கலானது) |

ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை உதவிப் பணிப்பாளரிடமிருந்து (தொடர்பிலக்கம்: 0112426800 – நீடிப்பு: 303, 305, 277) மின்னஞ்சல் முகவரி: **amilam@srilanka.travel and sltdaproc@srilanka.travel.**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல.: 80, காலி வீதி, கொழும்பு-03.**

## இலங்கை முதலீட்டுச் சபை

# பெறுகை அறிவித்தல்

கீழ்க்காணும் பெறுகைக்காக பெறுகை கோரல் அறிவித்தல் 2022.12.07 புதன் மற்றும் 2022.12.10 சனி தினங்களில் (Daily News) பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

REFURBISHMENT OF 2,000 $M^3$/DAY CAPACITY WATER TREATMENT PLANT AT HORANA EXPORT PROCESSING ZONE

CONTRACT NO: BOI/TS/HEPZ/2022/02/08.02.033

மேற்படி பெறுகைக்காக குறித்த கேள்விப் பத்திரங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு 2022.12.07 புதன் மற்றும் 2022.12.10 சனி நாட்களில் (Daily News) பத்திரிகையின் குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படுமாறு இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

**தலைவர்**
**இலங்கை முதலீட்டு சபை**

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. 7/3/1/13/ருசிகம/கென்ட் வத்த/சுவீ 11

காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/15/2015/VE/204

இங்கு கீழே காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை மொரகஹகந்த, களுகங்கை அபிவிருத்தித் திட்டத்திற்காக எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2266/54 மற்றும் 2022.02.10 திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| பிரதேசச் செயலகப் பிரிவு | : பல்லேபொல |
| காணியின் பெயர் | : கென்ட் வத்த |
| கிராமம் | : கலஹிடியாவ |
| வரைபட இலக்கம் | : க.கி.வ.60 இல் குறைநிரப்பி 8 பத்திர இல.9 துண்டு இல.134 |
| விஸ்தீரணம் | : 0.2503 ஹெக்டயார் |

**எச்.எம்.சீ.ஏக்கநாயக்க**
**பிரதேச செயலாளர்,**
**பல்லேபொல**

**2022.12.01 ஆம் திகதி,**
**பல்லேபொல பிரதேச செயலகத்தில்**

**பெயர் மாற்றம்**

இலக்கம் 260, கடற்கரை பள்ளி வீதி, கல்முனை - 03 எனும் முகவரியில் வசிக்கும் சுலைமாலெவ்வை ஹில்மி ஆகிய நான், ஒரு பெண்ணாவேன். எனினும் 1422 ஆம் இலக்க பிறப்புப் பதிவு புத்தகத்தில் **“ஆண்”** என பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் **ஒரு பெண்** என்பதை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அனைத்து தரப்பினருக்கும் அறியத் தருகின்றேன்.

**(சுலைமா லெவ்வை ஹில்மி)**

## திருத்தம்
## பெறுகை அறிவித்தல்
**ஊவா மாகாண சபை**
## பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகம்

2022 நவம்பர் 18ம் திகதி டெயிலிநியூஸ் பத்திரிகையின் 24ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட முழுமையான அறிவித்தலில் மற்றும் அன்றே தினமின பத்திரிகையில் 19ம் பக்கத்தில் மற்றும் தினகரன் பத்திரிகையின் 18ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட குறுகிய அறிவித்தலில் கீழ்க்காணுமாறு திருத்தம் செய்யப்படுகிறது.

- கேள்விகள் விநியோகிக்கப்படும் தினம் : 2022.12.16ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது
- கேள்விகள் செல்லுபடியாகும் காலம் : 2023.03.19ம் திகதி வரை இருத்தல் வேண்டும்.
- கேள்விப் பிணையின் செல்லுபடியாகும் காலம் : 2023.04.19ம் திகதி வரை இருத்தல் வேண்டும்.
- கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் திகதி மற்றும் நேரம் : 2022.12.19ம் திகதி பி.ப. 2.00 வரை
- கேள்விகள் திறக்கப்படும் தினம் மற்றும் நேரம் : 2022.12.19ம் திகதி பி.ப. 2.00 இற்கு கேள்விகள் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை மாகாண கட்டிடத் திணைக்களத்திற்குச் சொந்தமான 055-2229629 தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் - பெறுகைக் குழு**
**பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலகம்,**
**பிங்அராவ, பதுளை.**
**தொ.பே/ பெக்ஸ் இலக்கம் - 055-2222218, ஈமெயில் - desengupc@gmail.com**
**திகதி: 2022.12.05**

**Repeat Your Ad For Better Offers**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## மாவட்டச் செயலகம் - மொனராகலை

## பாவித்த வாகனங்களை விற்பனை செய்வதற்காக விலைமனுக் கோரல்

மொனராகலை மாவட்டச் செயலகத்திற்குரித்தான பாவிக்கப்பட்ட பின்வரும் வாகனங்களை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**வாகனங்களைப் பரீட்சித்தல்**

இந்த வாகனங்களை மொனராகலை மாவட்டச் செயலக வளவில் 2022-12-08ஆம் திகதி முதல் 2022-12-20ஆம் திகதி வரையில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைக்கோரல் படிவங்கள் வழங்குதல்

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான விலைக்கோரல் விண்ணப்பப் படிவங்களை மொனராகலை மாவட்டச் செயலகத்தின் நிறுவனப் பிரிவிலிருந்து 2022-12-08ஆம் திகதி முதல் 2022-12-20ஆம் திகதி வரையில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும்போது மீளளிக்கப்படும் மற்றும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகை மற்றும் விலைக்கோரல் கட்டணங்களை மொனராகலை மாவட்டச் செயலகத்தின் சிறாப்பருக்குச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். குறித்த விலைகள் வெவ்வேறாக பின்வருமாறாகும். வாகனங்களை ஏலத்திலிருந்து அப்புறப்படுத்திக் கொள்ளும் முழுமையான உரிமையை மாவட்டச் செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

| தொ. இல. | வாகன இலக்கம் | வாகன வகை | உற்பத்தி வருடம் | விலைக் கோரல் கட்டணம் மீளளிக்கப் படாதது ரூபா | விலைக் கோரல் வைப்பு (மீளளிக்கப் படும் தொகை ரூபா) | வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இடம் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 57-8983 | டபள் கெப் - Isuzu | 1996 | 1000.00 | 2000.00 | மாவட்டச் செயலகம், மொனராகலை | பதிவு இரத்துச் செய்யப்பட்டு துண்டுகளாக ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. |
| 02 | 32-1334 | டபள் கெப் - Daihatsu | 1985 | 1000.00 | 5000.00 | மாகாண இயந்திரப் பணிப்பாளர் அலுவலகம், கஹகொல்ல, பண்டாரவளை | |
| 03 | 31-6455 | ஜீப் - Daihatsu | 1981 | 1000.00 | 2000.00 | மாகாண இயந்திரப் பணிப்பாளர் அலுவலகம், கஹகொல்ல, பண்டாரவளை | |
| 04 | 31-2117 | ஜீப் - Daihatsu | 1979 | 1000.00 | 2000.00 | மாகாண இயந்திரப் பணிப்பாளர் அலுவலகம், கஹகொல்ல, பண்டாரவளை | |
| 05 | 50-4872 | டபள் கெப் - Nissan | 1987 | 1000.00 | 5000.00 | மாவட்டச் செயலகம், மொனராகலை | பதிவு சகிதம் வாகனமாக ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது |
| 06 | 52-5386 | டபள் கெப் - Mitsubishi | 1992 | 1000.00 | 5000.00 | மாவட்டச் செயலகம், மொனராகலை | |
| 07 | 157-9079 | மோட்டார் சைக்கிள் - Hero Honda | 1999 | 1000.00 | 500.00 | மாவட்டச் செயலகம், மொனராகலை | |
| 08 | 56-6503 | டபள் கெப் - Mitsubishi | 1995 | 1000.00 | 12000.00 | மாவட்ட சமுர்த்தி அலுவலகம் | |

- முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2022-12-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் ‘‘தலைவர், பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், மொனராகலை’’ எனும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது மாவட்டச் செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

- கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘..................... இலக்க வாகனத்திற்கான விலைமனு’’ எனக் குறிப்பிட்டு நிறுவனப் பிரிவில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய விண்ணப்பப் படிவத்தின் மேற்கோள் விலைகள் சகிதம் ஒவ்வொரு வாகனத்திற்காகவும் வெவ்வேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.

- விலைமனுக்கள் 2022-12-21ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு மொனராகலை மாவட்டச் செயலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். விலைமனுக்கள் மற்றும் கடப்பாடுடைய செயற்பாடுகளின் இறுதித் தீர்மானத்தை மாவட்டச் செயலக பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் மாவட்டச் செயலக பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

- விலைக்கோரல் நிறைவடைந்த பின்னர் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியினால் விலைக்கோரல் தொகையில் 50% அல்லது முழுத் தொகையையும் மாவட்டச் செயலகத்தின் சிறாப்பருக்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அதன்பொருட்டு பற்றுச்சீட்டொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். 50% தொகை செலுத்தப்பட்டிருந்தால் விலைமனுக்கள் திறக்கப்பட்ட நாள் முதல் 14 நாட்களுக்குள் மிகுதித் தொகை அனைத்தும் செலுத்தப்படலாம்.

**கே. பிரகீத் குணதிலக்க,**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**மொனராகலை.**

## பிரதேச சபை - வெலிமடை

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2023

வெலிமடை பிரதேச சபைக்கு 2023ஆம் வருடத்தில் வழங்கல் மற்றும் சேவைகளை மேற்கொள்வதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உங்களது விண்ணப்பப் படிவங்களை கீழ் குறிப்பிடப்பட்ட வழங்கல் மற்றும் சேவைகளின் கீழ் பதிவு செய்து கொள்வதற்கு எதிர்பார்ப்பதோடு, பிரதேச சபை அதிகார பிரதேச எல்லைக்குள் உள்ள வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**01. வழங்கல்:**

01. அலுவலகத்திற்கு தேவையான காகிதாதிகள் மற்றும் டோனர் வகைகள்.
02. வாகனம்/ இயந்திர உதிரிப்பாகங்கள்
03. மரத்தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்
04. மின் உபகரணங்கள்
05. டயர், டியூப் மற்றும் பெட்டரி
06. கல், செங்கல், மணல் (பிரதேச/மஹியங்கனை)
07. எரிவாயு, எரிவாயு சிலின்டர் மற்றும் வீட்டு உபகரணங்கள்
08. கட்டிடப் பொருட்கள் (கம்பி, கூரைத்தகடு, ஆணி வகைகள், சீமெந்து, தகரம், நீர் தொட்டி ஆகியன)
09. சீருடைகள்
10. கணனி, அச்சுப்பொறி, புகைப்படப்பிரதி இயந்திரம் மற்றும் அவைகளின் துணைப்பாகங்கள்
11. விளையாட்டு உபகரணங்கள்
12. சுகாதார உபகரணங்கள் (விளக்குமாறு, தும்புத்தடி, ஹாபிக், லைசோல், வடிகால் தூரிகை முதலியன)
13. நூலக புத்தகங்கள்
14. ஜே.சி.பி. இயந்திரங்கள், நீர் பவுசர், டிப்பர் வண்டி, டிரக்டர் என்பவற்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்.
15. சிறுவர் பூங்கா உபகரணங்களை வழங்குதல்
16. உணவுப் பொருட்கள் வழங்குதல்

**02 சேவைகள்:**

01. இயந்திரங்கள்/ வாகனங்களின் திருத்தவேலைகள் மற்றும் பருவகால சேவைகள் வழங்குதல்
02. கணனி இயந்திரம், அச்சுப்பொறி மற்றும் புகைப்படப்பிரதி இயந்திர திருத்தவேலைகள்
03. அலுவலக மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள்
04. சுகாதார சேவைகள் வழங்கல்
05. காப்புறுதி சேவைகளை வழங்கல்

**நிபந்தனைகள்**

01. மேற்கூறப்பட்ட அனைத்து வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக அலுவலகம் வரையில் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
02. கட்டளை வழங்கப்பட்டதன் பின் பொருட்கள் மற்றும் சேவைகளை கடன் அடிப்படையில் வழங்குதல் வேண்டும்.
03. விலைப்பட்டியல் கிடைத்த பின் 30 நாட்களுக்குள் செலுத்தப்படும்.
04. குறித்த விண்ணப்பப் படிவத்தை இந்த அலுவலகத்தின் காசாளரிடம் 1000.00 ரூபாவைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
05. விண்ணப்பத்தை ஒப்படைக்கும் போது வியாபாரப் பதிவுச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி ஒன்றை இணைத்தல் வேண்டும்.
06. அனைத்து விண்ணப்பங்களையும் 2022.12.31ஆம் திகதியில் இந்த அலுவலகத்திற்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.
07. ஒவ்வொரு வழங்கல்/சேவைகளுக்காக வெவ்வேறாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
08. குறித்த விண்ணப்பப் படிவத்தை பின்வரும் மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விண்ணப்பப் படிவத்துடன் குறித்த கட்டணத்தை காசோலை மூலம் செலுத்தலாம்.

மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நேரங்களில் இந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். 0572245973.

**மின்னஞ்சல்: pswelimada@gmail.com**
**தலைவர்**
**பிரதேச சபை,**
**வெலிமடை.**

**வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் - 2023**

| | | | |
|---|---|---|---|
| 01. | வர்த்தகரின் பெயர் மற்றும் முகவரி | : | ........................................................ |
| 02. | அடையாள அட்டை இலக்கம் | : | ........................................................ |
| | தொலைபேசி இலக்கம் | : | ........................................................ |
| 03. | வியாபாரத்தின் பெயர் மற்றும் முகவரி | : | ........................................................ |
| | தொலைபேசி இலக்கம் | : | ........................................................ |
| 04. | வியாபாரப் பதிவிலக்கம் மற்றும் திகதி | : | ........................................................ |
| 05. | பதிவு செய்யும் வழங்கல் மற்றும் சேவை: | | ........................................................ |
| 06. | பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி | : | ........................................................ |

மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிப்படுத்துவதோடு உங்களால் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்குகின்றேன்.

........................................................
**உத்தியோகபூர்வ முத்திரை மீது கையொப்பம்**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

## விலைக்கோரல் அறிவித்தல் - 2022.12.07

பின்வரும் வேலைகள்/ வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | $225m^3$ நீர்த்தேக்க முனை முதல் பரிமாற்றம் மற்றும் விநியோக பிரதான உட்பகுதிக்கு HDPE/DI குழாய்கள் மற்றும் பொருத்தல்கள், விசேடங்கள் மற்றும் வால்வுகளைப் பதித்தல்<br>ஒப்பந்த இல: **RSC-C/P&D/CIVIL/PL/RECH(UOP)/ UNIVERSITY/ 2022/02** | 20,000/-+ VAT ** | ரூபா 791,200/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C4 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 52.74 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 28/12/2022<br>மு.ப. 10.00 |
| 02 | பட்டவல வலயத்தின் கீழுள்ள ஹெம்மாதகம நீர் வழங்கல் திட்டத்திற்கு HDPE/DI குழாய்கள், பொருத்தல்கள், விசேடங்கள் மற்றும் வால்வுகளைப் பதித்தல்<br>ஒப்பந்த இல: **RSC(SAB)/AGM(KEG)/HWSP/ MAWANELLA/ CIVIL/2022/174** | 20,000/-+ VAT ** | ரூபா 810,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C4 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 80.1 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 28/12/2022<br>மு.ப. 10.00 |
| 03 | பொஹொரவத்த வலயத்தின் குழாய் பதித்தலுக்காக குறுக்கு மதகுகள், அறைகள் மற்றும் ஏனைய அது சார்ந்த வேலைகளை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல: **RSC(NW)/DEV/C/UNDP/POHORA/ 2022/81** | 4,000/-+ VAT | ரூபா 38,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு | 3.8 மில்லியன் | பிஔநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புள்ளை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086 | 28/12/2022<br>பி.ப. 2.00 |
| | 2022-11-16ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. கண்டி தெற்கு நீர் வழங்கல் திட்டம் - சரசவிய உயன விடுதிகளுக்கான புதுப்பித்தல் வேலைகள் ஒப்பந்த இல. **RSC-C/CS/REH/U-Y/SARASAVIUYANA/2022/163 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-12-14ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 04 | மட்டக்களப்பு பிராந்தியத்திற்கு தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்<br>ஒப்பந்த இல:**RSC(E)/DGM/RECH/IT EQUIPMENT'S/ BATTI/2022/040** | 4,000/-+ VAT | ரூபா 55,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் கணனிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | 3.12 மில்லியன் | பிரதிப் பொது முகாமையாளர், பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele:026-2222519/ 0262222028 Fax:0262225225 | 21/12/2022<br>மு.ப. 10.00 |
| 05 | Portable type Hydraulic Puller மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல:**RSC(E)/DGM/RH/PORTABLE HYDRALIC PULLER/ VAVU-WTP/BATTI/2022/037** | 4,000/-+ VAT | ரூபா 52,500/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் Portable Hydraulic Puller வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | 3.50 மில்லியன் | பிரதிப் பொது முகாமையாளர், பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (கிழக்கு), தேநீவவச, இல. 48A/1, கண்டி வீதி, திருகோணமலை.<br>Tele:026-2222519/ 0262222028 Fax:0262225225 | 21/12/2022<br>மு.ப. 10.00 |
| | 2022-11-23ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. கிழக்கு பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திற்கு of Portable Type Ultrasonic Water Flow Meter மற்றும் Digital Pressure Gauges வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல: **RSC(E)/DGM/ NRW/SUP-FM&PG/ TRINCO/2022/39 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-12-21ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | 2022-11-23ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. மட்டக்களப்பிலுள்ள வவுணதீவு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கு நீரின் தர அளவுருக்களை கண்காணிப்பதற்கு நிகழ்நிலை பகுப்பாய்வு கருவிகளை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், நடைமுறைப்படுத்துதல் ஒப்பந்த இல: **RSC(E)/DGM/RH/ANALYSER INSTRUMENTS/VAVU-WTP/BATTI/2022/038 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2022-12-21ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | **M & E கேள்விகள்** | | | | | | |
| 06 | கட்டுகஸ்தோட்ட, பாரிய கண்டி நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் தற்போதுள்ள மோட்டார் கட்டுப்பாட்டு பெனலுக்கு VSD மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்<br>ஒப்பந்த இல: **RSC-C/O&M/E&M/GKWTP/2022/209** | 6,000/-+ VAT ** | ரூபா 134,250/- | VSD தொகுதிகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>2022-12-14ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு கட்டுகஸ்தோட்ட, பாரிய கண்டி நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, முகாமையாளர் (உற்பத்தி) அலுவலகத்தில் கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>**(T:P – 081 2492300)** | 21/12/2022<br>பி.ப. 2.00 |
| 07 | பிஔநி கட்டிடத்தின் மீளமைப்பு - மின்சார வேலைகள் (தரைத் தளம் மற்றும் முதலாம் தளம்)<br>ஒப்பந்த இல: **RSC-C/M&E/S&I/ELECTRICAL/ KNPIWSP/ RSC/2022/157** | 12,500/- + VAT ** | ரூபா 164,000.00 | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>2022-12-28ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு பேராதனை, கெட்டம்பே, பிஔநி- மத்திய அலுவலகம், M&E பிரிவில் கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>**(T:P- 081 2388086 / Ext 450)** | 04/01/2023<br>பி.ப. 2.00 |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 08 | வவுனியா, மன்னார், அடம்பன் நீர் வழங்கல் திட்டத்திற்கு Caretaker சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/O&M-V/CARETAKER SERVICES/ VAV-MAN-ADA/2022/46** | 12,500/- + VAT ** | Caretaker சேவை ரூபா 110,000/- | ஆவணத்தின் பிரகாரம் தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் சேவைகளை (கேள்விக்கு இயைபான) வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 12.65 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341<br>2022-12-12ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>இடம்: பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடக்கு), தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. | 21/12/2022<br>பி.ப. 2.00 |
| 09 | வவுனியா, மன்னார் நீர் வழங்கல் திட்டங்களுக்கு நீர் மானி வாசிப்பாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/O&M-V/METER READER / VAV-MAN/ 2022/47** | 6,000/- + VAT ** | நீர்மானி வாசிப்பவர் ரூபா 60,000/- | ஆவணத்தின் பிரகாரம் தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் சேவைகளை (கேள்விக்கு இயைபான) வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 6.49 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341<br>2022-12-12ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>இடம்: பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடக்கு), தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. | 21/12/2022<br>பி.ப. 2.00 |
| 10 | கிளிநொச்சி, உபொமு வடக்கு அலுவலகத்திற்கு தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/O&M/UNSKILLED WORKMEN SERVICE- AGM OFFICE-KILI/2022/061** | 4,000/- + VAT ** | ரூபா 45,000/- | ஆவணத்தின் பிரகாரம் தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை (கேள்விக்கு இயைபான) வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் | 3.63 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 21/12/2022<br>பி.ப. 2.00 |
| 11 | யாழ்ப்பாணம் பிராந்தியத்திற்கு தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/O&M- J/METER READER/2022/028** | 12,500/- + VAT ** | நீர்மானி வாசிப்பவர் ரூபா 220,000/- | ஆவணத்தின் பிரகாரம் தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சியற்ற மற்றும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் சேவைகளை (கேள்விக்கு இயைபான) வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 15.05 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341<br>2022-12-14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>இடம்: பிராந்திய முகாமையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் | 21/12/2022<br>பி.ப. 2.00 |
| 12 | யாழ்ப்பாணம் நீர் வழங்கல் திட்டத்திற்கு தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/O&M/JAF/CARETAKER SERVICE/2022/037R** | 12,500/- + VAT ** | 8 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுடைய Caretaker ரூபா 115,000/-<br>8 வருடத்திற்குக் குறைந்த அனுபவமுடைய Caretaker ரூபா 105,000/- | ஆவணத்தின் பிரகாரம் தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சியற்ற மற்றும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் சேவைகளை (கேள்விக்கு இயைபான) வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 14.57 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341<br>2022-12-14ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>இடம்: பிராந்திய முகாமையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் | 21/12/2022<br>பி.ப. 2.00 |
| 13 | யாழ்ப்பாணம் நீர் வழங்கல் திட்டங்களுக்கு தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/O&M/JAF/SKILLED SERVICE/2022/045R** | 12,500/- + VAT ** | தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் ரூபா 172,000/- | ஆவணத்தின் பிரகாரம் தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சியற்ற மற்றும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் சேவைகளை (கேள்விக்கு இயைபான) வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (COB) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் மற்றும் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 11.44 மில்லியன் | பிஔநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341<br>2022-12-14ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>இடம்: பிராந்திய முகாமையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் | 21/12/2022<br>பி.ப. 2.00 |
| 14 | இரட்டைப்பாதை நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் கட்டிடம் மற்றும் வேலைத் தளத்தை சுத்திகரித்தல், இரட்டைப்பாதை நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் இரட்டைப்பாதை நீர் உள்ளீர்ப்பை பராமரிப்பதற்கான ஒப்பந்தம்.<br>ஒப்பந்த இல: ප්‍රාසේම(ම)/ම.ද./සේවා/දිගාන/ගම්පොළ/**2022/179** | 4,000/-+ VAT | ரூபா 42,000/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068, Fax: 081-2388027<br>2022-12-14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பேராதனை, கெட்டம்பே முகாமையாளர் (மத்திய தெற்கு) அலுவலகத்தில் கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>**(T:P. – 081 2388086 / Ext-201)** | 21/12/2022<br>பி.ப. 2.00 |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# அதிரடி வெற்றியுடன் பிரேசில் காலிறுதிச் சுற்றுக்குத் தகுதி

## அடுத்து குரோசியாவுடன் மோதல்





தென் கொரியாவுக்கு எதிரான நொக் அவுட் சுற்று போட்டியில் 4–1 என்ற கோல் வித்தியாசத்தில் அதிரடி வெற்றியீட்டிய பிரேசில் அணி உலகக் கிண்ண கால்பந்து தொடரின் காலிறுதியில் குரோசியாவுடன் மோதவுள்ளது.

குரோசிய அணி திங்கட்கிழமை நடந்த நொக் அவுட் போட்டியில் ஜப்பானை பெனால்டி சூட் அவுட் முறையில் 3–1 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்தது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான போட்டி முழு நேரம் மற்றும் வழங்கப்பட்ட 30 நிமிட மேலதிக நேரத்தில் 1–1 என சமநிலை பெற்றிருந்தது.

முடிவை தீர்மானிக்க பெனால்டி சூட் அவுட் முறை பயன்படுத்தப்பட்டபோதும் ஜப்பானின் முதல் இரு உதைகளையும் தடுத்த குரோசிய கோல் காப்பாளர் டொமினிக் லிவகோவிச் தொடர்ந்து மற்றொரு பெனால்டி முயற்சியையும் முறியடித்தார்.

குரோசியா கடந்த உலகக் கிண்ணத்தில் இறுதிப் போட்டிவரை முன்னேறியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கட்டாரின் 674 அரங்கில் நேற்று (06) அதிகாலை நடைபெற்ற போட்டியில் பிரேசில் அணி முதல் பாதியிலேயே அடுத்தடுத்து நான்கு கோல்களை புகுத்தியது.

இதன்போதும் காயத்தின் பின் அணிக்குத் திரும்பிய நெய்மார் பெனால்டி உதவியுடன் கோல் புகுத்தினார். இது பிரேசில் அணிக்காக நெய்மார் பெறும் 76 ஆவது கோலாக இருந்ததோடு பிரேசில் சார்பில் அதிக கோல்கள் பெற்ற பீலேவின் சாதனையை சமன் செய்ய அவருக்கு இன்னும் ஒரு கோலே எஞ்சியுள்ளது.

இந்நிலையில் பிரேசில் மற்றும் குரோசிய அணிகளுக்கு இடையிலான காலிறுதிப் போட்டி வரும் வெள்ளிக்கிழமை (09) நடைபெறவுள்ளது.

# பயிற்சியாளர் பதவியை துறக்க மஹேல முடிவு



மும்பை இந்தியன்ஸின் உலகளாவிய செயல்திறன் தலைவராக பதவி உயர்வு பெற்ற இலங்கை முன்னாள் அணித் தலைவர் மஹேல ஜயவர்தன சௌதெர்ன் பிரேவ் அணியின் தலைமை பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகவுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

இங்கிலாந்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவரும் தி ஹண்ட்ரட் கிரிக்கெட் தொடரில் சௌதெர்ன் பிரேவ் அணியின் தலைமை பயிற்சியாளராக மஹேல ஜயவர்தன செயற்பட்டு வந்தார்.

தொடர்ந்தும் அடுத்து நடைபெறவுள்ள பருவகாலங்களிலும் அவர் தலைமை பயிற்சியாளராக செயற்படுவார் என எதிர்பார்க்கப்பட்டபோதும், வேலைப்பளு காரணமாக மஹேல ஜயவர்தன பதவியிலிருந்து விலகுவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறிப்பாக மும்பை இந்தியன்ஸ் நிர்வாகத்தின் கீழுள்ள அணிகள் ஐ.எல்.டி20 தொடர் மற்றும் எஸ்.ஏ டி20 லீக் போன்ற தொடர்களில் விளையாடவுள்ளன. இந்த அணிகளுக்கான பொறுப்புகள் மஹேல ஜயவர்தனவுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே மஹேல ஜயவர்தன சௌதெர்ன் பிரேவ் அணியிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளார்.

தி ஹண்ட்ரட் கிரிக்கெட் தொடர் 2 ஆண்டுகள் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், முதல் ஆண்டு சௌதெர்ன் பிரேவ் அணி சம்பியனாக முடிசூடியிருந்ததுடன், இந்த ஆண்டு 7ஆவது இடத்தைப் பிடித்தது.

மஹேல ஜயவர்தன மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக கடந்த 2017ஆம் ஆண்டு முதல் செயற்பட்டுவருவதுடன், 3 தடவைகள் மும்பை அணி கிண்ணத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சைக்கிளோட்டப் போட்டியில் அவிஷ்க, மதுமாலி வெற்றி



தேசிய சைக்கிளோட்ட சம்பியன்சிப் போட்டியின் சிரேஷ்ட ஆடவர் பிரிவில் அவிஷ்க மெடோன்சாவும் பெண்கள் சிரேஷ்ட பிரிவில் மதுமாலி பெர்னாண்டோவும் வெற்றியீட்டினர்.

இலங்கை சைக்கிளோட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போட்டி கடந்த டிசம்பர் 2,3ஆம் திகதிகளில் அளுத்கமை மொரகல்ல காலவிலத்த மைதானத்திற்கு அருகில் ஆரம்பிக்கப்பட்டது. அளுத்கமை, மத்துகமை, களுத்துறை நகரங்களை உள்ளடக்கியதாக போட்டிகள் இடம்பெற்றன.

விளையாட்டு அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் ஆலோசனையில் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வாவின் தலைமையில் இந்தப் போட்டி இடம்பெற்றது.

இதில் கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளில் போட்டிகள் இடம்பெற்றன.

# எல்.பி.எல்.: நடப்புச் சம்பியன் ஜப்னா கிங்ஸ் அணிக்கு ஆரம்பப் போட்டியிலேயே வெற்றி




லங்கா பிரீமியர் லீக் (எல்.பி.எல்.) தொடரில் நடப்புச் சம்பியன் ஜப்னா கிங்ஸ் அணி, கோல் கிளாடியேட்டர்ஸ் அணியை வீழ்த்தி ஆரம்பப் போட்டியில் 24 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

3ஆவது எல்.பி.எல் தொடர் ஹம்பாந்தோட்டையில் நேற்று (06) ஆரம்பமானது. இதன் முதல் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட திசர பெரேரா தலைமையிலான ஜப்னா கிங்ஸ் அணி 19.5 ஓவர்களில் 137 ஓட்டங்களுக்கு சுருண்டது. சொஹைப் மலிக் மற்றும் துனித் வெல்லாலகே தலா 30 ஓட்டங்களை பெற்றனர்.

இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய கோல் கிளாடியேட்டர்ஸ் சார்பில் ஆரம்ப வீரரும் அணித்தலைவருமான குசல் மெண்டிஸ் 43 பந்துகளில் 51 ஓட்டங்களைப் பெற்றார். எனினும் மத்திய வரிசையில் கோல் வீரர்கள் சோபிக்கத் தவறினர்.

இதனால் 20 ஓவர்கள் முடிவில் அந்த அணி 113 ஓட்டங்களுக்கு சுருண்டது. பந்துவீச்சில் பினுர பெர்னாண்டோ 3 விக்கெட்டுகளை பதம் பார்த்தார்.

லங்கா பிரீமியர் லீக் தொடரின் முதல் இரு தொடர்களிலும் ஜப்னா கிங்ஸ் அணியே சம்பியன் கிண்ணத்தை வென்றது. இதன் முதல் தொடரில் ஜப்னா ஸ்டலியன்ஸ் என்ற பெயரிலேயே அந்த அணி ஆடியது.

## சர்வதேச செய்திகள்

### இந்தோனேசியா:

# திருமணத்திற்கு வெளியிலான உறவுக்கு தடை நிறைவேற்றம்



திருமணத்திற்கு வெளியில் உடலுறவில் ஈடுபடுவோருக்கு ஓர் ஆண்டு வரை சிறைத் தண்டனை விதிக்கும் புதிய குற்றவியல் சட்டம் ஒன்று இந்தோனேசிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அடுத்த மூன்று ஆண்டுகளில் அமுலுக்கு வரவிருக்கும் புதிய குற்றவியல் சட்டத்தில் ஜனாதிபதியை அவமதிப்பது மற்றும் அரச சிந்தனைக்கு எதிராக பேசுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த சட்டத்துக்கு எதிராக தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள பாராளுமன்றத்திற்கு வெளியில் சிறிய பேரணிகள் இடம்பெற்று வருகின்றன.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டினருக்கு பொருந்தும் வகையிலான இந்த சட்டக் கோவையில் பல 'ஒழுக்க' சட்டங்களும் உள்ளக்கப்பட்டுள்ளன. இதன்படி திருமணம் புரியாத ஜோடிகள் ஒன்றாக வாழ்வது மற்றும் உடலுறவு கொள்வது சட்டவிரோதமாக்கப்பட்டுள்ளது. இது நாட்டில் உள்ள பெண்கள், எல்.ஜி.பி.டீ சமூகத்தினர் மற்றும் சிறுபான்மையினரை பாதிக்கும் என்று உரிமைக் குழுக்கள் குறிப்பிட்டுள்ளன.

திருமணமானவர்கள் இந்தச் சட்டத்தை மீறினால் அவரது கணவன் அல்லது மனைவிக்கு புகார் அளிக்கும் உரிமை வழங்கப்படுகிறது.

# நிலச்சரிவில் பஸ் புதையுண்டு கொலம்பியாவில் 34 பேர் பலி



மத்திய கொலம்பியாவில் நெடுஞ்சாலை ஒன்றில் நிலச்சரிவால் ஒரு பஸ் வண்டி மற்றும் இரு வாகனங்கள் புதையுண்டதில் குறைந்தது 34 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடும் மழையைத் தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களில் எட்டு சிறுவர்களும் இருப்பதாக தேசிய அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒருவர் தனது மனைவி மற்றும் இரு குழந்தைகளையும் பஸ்ஸில் இருந்து காப்பற்றிய நிலையில் மண்ணில் புதையுண்டு உயிரிழந்துள்ளார். கார் விபத்து ஒன்றினால் தொடர்ந்து முன்னேற முடியாத நிலையில் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த பஸ், ஜீப் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றே இந்த நிலச்சரிவில் சிக்கியதாக பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# கொங்கோ கிராமங்களில் தாக்குதல்: 300 பேர் பலி



எம்23 கிளர்ச்சிக் குழு மீது குற்றம்சாட்டப்படும் கொங்கோ நாட்டின் கிழக்கு பகுதிகளில் உள்ள கிராமங்கள் மீது கடந்த வாரம் நடத்தப்பட்ட தாக்குதல்களில் சுமார் 300 பேர் கொல்லப்பட்டதாக அரச தரப்பு அறிவித்துள்ளது.

பலவீனமான போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்று எட்டப்பட்டு சில நாட்களிலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் வடக்கு கிவு மாகாணத்தில் உள்ள கிராமங்கள் மீதே தாக்குதல் இடம்பெற்றுள்ளன.

எனினும் கிளர்ச்சியாளர்கள் இந்தக் குற்றச்சாட்டை அடிப்படையற்றது என்று மறுத்துள்ளனர். கிராமத்தில் துப்பாக்கிச் சண்டை ஒன்றின்போதும் இடையில் சிக்கி எட்டு கிராமத்தவர்கள் கொல்லப்பட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் கொல்லப்பட்டவர்களில் ஏழு சிறுவர்கள் இருப்பதாகவும் தேவாலயம் மற்றும் மருத்துவமனைகளிலும் பொது மக்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் அரச பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.நா பாதுகாப்புச் சபை: இந்தியா தலைமையேற்பு



இந்தியா டிசம்பர் மாதத்திற்காக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தலைமை பொறுப்பை ஏற்றுள்ளது.

இரண்டு ஆண்டு தவணைக்காக பாதுகாப்புச் சபை அங்கத்துவத்திற்கு தேர்வு செய்யப்பட்ட இந்தியா தலைமை பொறுப்பை ஏற்பது இது இரண்டாவது முறையாகும்.

இந்தியாவின் தலைமையின் கீழ் டிசம்பரில் பாதுகாப்புச் சபையில் இரு முக்கிய அமைச்சர் மட்டத்திலான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. டிசம்பர் 14, 15இல் இடம்பெறும் இந்த நிகழ்வில் சீர்திருத்தப்பட்ட பன்முகத்தன்மை மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையை திட்டமிடல் செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன.

# ரஷ்யாவின் தாக்குதல்களால் இருளில் மூழ்கியது உக்ரைன்



புதிதாக திருத்தப்பட்ட உக்ரைனின் மின் கட்டமைப்புகள் மீது ரஷ்யா கடந்த திங்கட்கிழமை சரமாரி தாக்குதல்களை நடத்திய நிலையில் அங்கு அவசர மின் தடைகள் ஏற்பட்டுள்ளன.

உறையும் குளிருக்கு மத்தியில் உக்ரைனின் சில பகுதிகளில் விழுந்த ஏவுகணைகளால் அந்தப் பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன. அந்நாட்டு மின் கட்டமைப்புகள் மீதான ரஷ்யாவின் தாக்குதல்களின் தொடர்ச்சியாக இது நடந்துள்ளது.

இதில் குறைந்தது நான்கு பேர் கொல்லப்பட்டதாக குறிப்பிட்ட உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி, 70 ஏவுகணைகள் விழுந்ததாகவும் தெரிவித்தார். ஏற்கனவே ரஷ்யாவின் தாக்குதல்களால் மின் கட்டமைப்பின் பாதி அளவு சேதமடைந்துள்ளது. நாட்டில் வெப்பநிலை பூஜ்ஜியம் டிகிரி செல்சியஸுக்கு கீழ் பதிவாகும் நிலையில் அந்நாட்டு மக்கள் கடும் குளிர் மற்றும் இருளில் மூழ்கியுள்ளனர்.

இந்நிலையில் மக்கள் தாழ் வெப்பநிலையால் உயிரிழக்கக் கூடும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 7ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.